நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young
friends of fmpb

# கெரீத்

இளைஞர் மாத இதழ்

FRIENDS MISSIONARY PRAYER BAND

களத்தில்
2026
வீரியம்

## சமுதாயக் களத்தில் உண்மையாய் வாழ்வோம்!



Vol39-Issue 6 - June - 2026

Private circulation only



# கிறிஸ்து யோசுவாவை விட மேலானவர்



எபிரெயர் நிருபம் எழுதப்படும்போது பழைய ஏற்பாட்டுத் தலைவர்களையும், சடங்குகளையும் கிறிஸ்துவோடு ஒப்பிட்டு, கிறிஸ்துவே அனைத்திலும் மேலானவர் என்பதை உறுதிப்படுத்துகிறார். குறிப்பாக எபிரெயர் 4:8-11 வரையிலான வசனங்கள், யோசுவாவினால் கொடுக்க முடியாத ஒரு "நித்திய ஓய்வை" கிறிஸ்து நமக்குத் தருகிறார் என்பதை விளக்குகின்றன.

### யோசுவாவை விட மேலான கிறிஸ்து: நித்திய ஓய்வின் நாயகன் (Vs. 8)

- ✦ யோசுவாவில் ஓய்வு ஒரு நிழலாட்டம்: பழைய ஏற்பாட்டில் யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்திற்குள் வழிநடத்திச் சென்றார். அங்கே அவர்கள் தங்கள் சத்துருக்களிடமிருந்து விடுபட்டு ஓரளவிற்கு அமைதியையும், ஓய்வையும் கண்டார்கள். இருப்பினும் அந்த ஓய்வு முழுமையானது அல்ல. எபிரெயர் 4:8 கூறுவது போல "யோசுவா" அவர்களை இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கப்பண்ணியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக் குறித்துச் சொல்லமாட்டாரே.

### தேவனுடைய ஜனங்களுக்குக் காத்திருக்கும் நித்திய ஓய்வு (Vs. 9)

- ✦ யோசுவா கொடுத்தது பூமிக்குரிய தற்காலிகமான ஓய்வு. ஆனால் கிறிஸ்து நமக்குப் பெற்றுத் தந்திருப்பது ஆவிக்குரிய மற்றும் நித்தியமான ஓய்வு. ஆகையால் தேவ ஜனங்களுக்கு ஓர் ஓய்வுநாள் இளைப்பாறுதல் மீதியாயிருக்கிறது என்று வேதம் உறுதிப்படுத்துகிறது. இது வெறும் சரீரப்பிரகாரமான ஓய்வு மட்டும் அல்ல, பாவத்தின் பாரத்திலிருந்தும், சுயகிரியைகளிலிருந்தும் விடுபட்டு, தேவனோடு நாம் அனுபவிக்கும் ஆவிக்குரிய சமாதானமாகும். ஆகவே உம்மைப் போற்றுகிறோம்.
- ✦ நித்திய இளைப்பாறுதலின் தேவனே உம்மைத் துதிக்கிறோம். யோசுவா கொடுத்த தற்காலிகமான தேசத்தைக் காட்டிலும் மேலான ஒரு நித்திய ஓய்வை எங்களுக்கு வாக்களித்திருக்கிற தயவிற்காக உமக்கு ஸ்தோத்திரம்.
- ✦ எங்கள் இளைப்பாறுதலின் காரணரே, உம்மைப் போற்றுகிறோம். வெறும் இடமாற்றத்தினால் அல்ல, கிறிஸ்து இயேசுவின் மூலமாக எங்கள் ஆத்துமாவிற்கு உண்மையான அமைதியைத் தந்ததற்காக உம்மைத் துதிக்கிறோம்.
- ✦ கிரியைகளை முடித்த தேவனே, உம்மைத் துதிக்கிறோம். உலகத்தைப் படைத்து முடித்தபின் நீர் ஓய்ந்திருந்ததுபோல, சிலுவையில் எங்களுக்காக இரட்சிப்பின் கிரியைகளை முற்றுமாய் முடித்து எங்களை உம்மோடு ஓய்ந்திருக்க அழைத்ததற்காக ஸ்தோத்திரம்.
- ✦ சத்தியத்தின் தேவனே, உம்மைத் துதிக்கிறோம். பழைய ஏற்பாட்டு நிழலாட்டங்களை விட, கிறிஸ்துவின் மூலமாக நிஜமான ஆசீர்வாதங்களை எங்களுக்கு வெளிப்படுத்திய உமது சத்தியத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம்.
- ✦ எங்களை வழிநடத்தும் மேய்ப்பரே, உம்மைப் போற்றுகிறோம். விசுவாசத்தினால் உம்முடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க எங்களுக்கு ஜாக்கிரதையுள்ள இருதயத்தையும், கீழ்ப்படிதலையும் தருகிற கிருபைக்காக உமக்கு ஸ்தோத்திரம்.
- ✦ அன்புள்ள தகப்பனே, உம்மைத் துதிக்கிறோம். அவிசுவாசத்தினால் நாங்கள் வழி தவறிப் போகாதபடி உமது வார்த்தையின் மூலம் எங்களை எச்சரித்து, நித்திய வாழ்விற்குப் பாத்திரவான்களாக மாற்றுகிற உமது பேரன்பிற்காக ஸ்தோத்திரம்.

யோசுவா ஒரு சிறந்த தேவ மனிதன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் கொடுத்த ஓய்வு ஒரு நிழல் மட்டுமே. கிறிஸ்துவோ அந்த நிழலுக்கு நிஜமானவர். அவர் சிலுவையில் அனைத்தையும் முடித்தபடியால், அவரில் விசுவாசம் வைக்கும் எவரும் இப்போதே ஆத்தும இளைப்பாறுதலைப் பெற்று, நித்தியத்தில் அவரோடு வாழ்ந்திருக்க முடியும். இதனாலேயே கிறிஸ்து யோசுவாவை விட மேலானவராக இருக்கிறார். அல்லேலூயா! ஆமென்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


## தனிப்பிரதி ரூ. 25/-
## ஆண்டு சந்தா ரூ. 250/-

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - Scale (Ruler) | - 5 |
| டோரி வான்ஸ்டோன் - வாழ்க்கை வரலாறு | - 6 & 7 |
| காங்கோ | - 10 |
| உடல் தோற்றக் குறைபாடு | - 12 |
| Digital Abuse | - 14 |
| உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? | - 15 |
| எது உன் தெரிந்தெடுப்பு? | - 19 & 20 |
| மகா கனம் பொருந்திய தெயோப்பிலு | - 22 |


# சமுதாயக் களத்தில் உண்மையாய் வாழ்வோம்!

பிரியமான வாலிபர்களுக்கு,
வார்த்தையிலும், செயலிலும் உண்மை உள்ளவராயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

சிமிர்னா சபைக்கு வரக்கூடிய துன்பங்கள் மற்றும் பாடுகளை இயேசு முன்பதாகவே சொல்வதை வெளி 2:10இல் நாம் பார்க்கிறோம். நீங்கள் 10 நாட்கள் உபத்திரவப்படுவீர்கள் என்பது, 10 விதமான பாடுகளாய் கூட இருக்கலாம் (நீரோ மன்னன் தொடங்கி போர்ச்சுகீசியனுடன் முடிவடைந்த 10 பாடுகளைக் குறிக்கலாம்). கிறிஸ்தவர்களாகிய நாம் துன்பங்களில், பாடுகளில் பாதுகாக்கப்படுவீர்கள் என்ற வாக்குறுதி கொடுக்கப்படவில்லை. ஆனால் நமக்கு வருகிற துன்பத்தின் வழியாக நாம் காக்கப்படுகிறோம். இயேசு ஒருபோதும் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மை கைவிடுவதில்லை. ஆகையால் நான் பயப்படேன். மனுஷன் எனக்கு என்ன செய்வான்? என்று நாம் அறிக்கையிட்டு மரணபரியந்தம் உண்மையாயிருந்து வாடாத, அழிவில்லாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் கிருபைச் செய்வாராக.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2026ஆம் ஆண்டின் தமிழ் மாநில முகாம் சிறப்பாக நடைபெற்றது. தேவனுக்கே மகிமையுண்டாவதாக. இதில், வாலிபர்கள் கூடுகையில் கலந்து கொண்ட 466 வாலிபர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். இவ்வாலிபர்கள் கேட்ட ஆண்டவருடைய வசனங்கள், மிஷனெரிகளின் சாட்சிகள் மற்றும் பெற்றுக்கொண்ட ஜெப பாரங்கள் இவற்றின் மூலமாக, இவர்கள் எடுத்த தீர்மானங்களில் நிலைத்து நிற்க நம்முடைய ஜெபங்களில் நினைவுக் கூறுவோம். இம்முகாமிற்காக ஜெபத்தோடு பிரயாசப்பட்ட அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

மே 28-30 வரை TWR Centre, பரமன்கேனியில் கல்பாக்கம் வட்டார வாலிபர் முகாம் சிறப்பாக நடைபெற கர்த்தர் உதவினார். இம்முகாமிற்காக ஜெபித்து, உழைத்த அனைத்து போதகர்கள் மற்றும் தலைவர்களுக்கும் நன்றிகளை தெரிவிக்கிறேன்.

**1967 ஜீன் 9ஆம் தேதி நமது இயக்கத்தின் முதல் மிஷனெரியாக Rev. ஹோரீஸ் ஹில்டன் அண்ணன், அன்றைய தர்மபுரி மாவட்டத்திலுள்ள பெரியமலை பகுதிக்கு சென்றார்கள். “அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?” (சகரியா 4:10) என்ற வசனத்திற்கேற்ப, இன்று நாம் 59வது ஆண்டை முடித்து 60ஆம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்க ஆண்டவர் தந்த கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த ஜீன் 9ஆம் தேதி பெரியமலையில் நடைபெறவுள்ள நன்றி கூடுகையில் வாய்ப்பு இருக்குமானால், நீங்களும் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கிறோம்.**

மேலும் இந்த மாதம் நடைபெறவுள்ள வாலிபர் கூடுகைகளுக்காக (பெரியமலை, தூத்துக்குடி, அம்பத்தூர், கருங்கல்) ஜெபித்துக் கொள்ளுங்கள். மரணபரியந்தம் உண்மையாய் வாழ்ந்து ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ள கர்த்தர் கிருபைத் தருவாராக! ஆமென்.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*

# மகிழ்ச்சியின் கூடாரம் இசக்கார்



REV. DANIEL GNANAPRAGASAM



மகிழ்ச்சி என்ற வார்த்தையைக் குறிக்கும் அநேக தமிழ் சொற்களும் (சந்தோஷம், ஆனந்தம், களிப்பு...), ஆங்கில வார்த்தைகளும் (Happy, Pleasure, Joy...) உள்ளன. இவற்றில் Joy என்ற பதம் மற்றவற்றைக் காட்டிலும் சிறப்புடையது. Joy means intense happiness (உள்ளத்திலிருந்து வெளிப்படும் மகிழ்ச்சியாகும்). மற்றவையெல்லாம் புறச் சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்ட, கண்ணுக்குத் தெரியும் வெளிப்படையான, நிலையற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாகும். இங்கே நாம் கொடுத்திருக்கும் "Rejoicing Tent" என்ற தலைப்பு, அகம் சார்ந்த நிலையான மகிழ்ச்சியைத் தங்கள் உள்ளத்திலும், இல்லத்திலும் அனுபவிக்கும் அர்த்தத்தை உணர்த்துகிறது. இத்தகைய மகிழ்ச்சியை தங்கள் வாழ்க்கையில் கொண்டிருந்த இசக்கார் கோத்திரத்தாரைப் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

இசக்கார், யாக்கோபுவின் ஒன்பதாவது மகன். லேயாள் சிறிதுகால இடைவெளிக்குப் பின்பு, யாக்கோபுவிடம் சேர்ந்ததினால் பெற்றெடுத்த ஐந்தாவது மகன். லேயாள் "நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைத் தேவன் எனக்குத் தந்தார்" என்று சொல்லி அவனுக்கு இசக்கார் என்று பெயரிட்டாள் (ஆதி. 30:18). இவ்வாறு இசக்கார் என்ற பெயர் Ish-Sakar - Man of hire (கூலிக்கு அமர்த்தப்பட்டவன்), Yesh-Sakar - There is a reward (ஒரு வெகுமதி உண்டு) என்ற இரண்டு வித அர்த்தங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

### இசக்காரின் சுபாவமும், மனநிலையும்:

வேதாகமத்திலே இசக்காரைக் குறித்த எந்த நேரடியான விளக்கங்களும் இல்லை என்றாலும், 1 நாளா. 12:32இல் அவர்கள் காலத்தை உணர்ந்த மனிதர்களாக அறியப்படுகிறார்கள். "இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்ய வேண்டியது இன்னதென்று அறிந்து, காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் 200 பேரும், இவர்கள் வாக்குக்கு செவிகொடுத்த இவர்களுடைய எல்லா சகோதரருமே." ஆம் இவர்கள் சவுலின் மரணத்திற்குப் பின்பு, தங்கள் சகோதரர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, தாவீதை ஆதரிக்க அறிவுறுத்தி வழிநடத்தியவர்கள் (2 சாமு. 5:1-5). இவ்வாறு அவர்கள் பகுத்தறிவிற்குப் பெயர் பெற்றவர்களாக, ஞானமுள்ள அறிஞர்களாக, வானியல் வல்லுநர்களாக அறியப்படுகிறார்கள். காலங்களைக் கணிக்க உதவும் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் இவர்களின் அடையாளச் சின்னமாக உள்ளது. மேலும் இந்த கோத்திரத்தார் ஆசாரியரின் மார்புக் கவசத்திலுள்ள நீலக்கல்லால் (Dark blue or Sapphire) குறிப்பிடப்படுகிறார்கள். இந்தக்கல் அளவற்ற ஆன்மீக மதிப்பையும், உண்மையையும் கொண்ட தேவனுடைய சட்டமான தோராவைக் (எண். 15:38) குறிக்கிறது.

### தகப்பனின் ஆசீர்வாதம்:

"இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை. அவன், இளைப்பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதிகட்டுகிறவனானான்" (ஆதி. 49:14, 15). "இரண்டு பொதியின் நடுவே" என்ற பதம் ஒன்றுக்கொன்று முரண்படும் நலன்களுக்கு இடையில் உள்ள வாழ்வை விவரிக்கிறது. இசக்கார் கோத்திரத்தாருக்கு வளமான "யெஸ்ரயேல் பள்ளத்தாக்கு" பகுதி சுதந்திரமாகக் கொடுக்கப்பட்டதை யோசுவா 19:17-22இல் வாசிக்கிறோம். இதன் தெற்கு எல்லையாக கில்போவா மலையும், வடகிழக்கு எல்லையாக தாபோர் மலையும் உள்ளது. Gilboa is a symbol of 'Disobediance' or 'Loss of divine favour'. Tabor is a symbol of 'The revelation of Christ's full divinity'. இவ்விரண்டு மலைகளின் மத்தியில் அவர்கள் வாழ்ந்தாலும், நலமானதைத் தெரிந்துகொள்வதில் வல்லவர்கள். அமைதியான சேவைக்கு தன்னைத் தாழ்மைப்படுத்த விரும்பும் பலமும், திடகாத்திரமும் உடைய பலத்த கழுதையாக அர்ப்பணித்தவர்கள். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வளமான நிலத்தின் இனிமையை உணர்ந்து செயல்பட்ட கட்டாய உழைப்பின் முன்னறிவிப்பாளர்கள்.

They have a strong mind to choose their right option with a humble manner. இவ்வாறு இசக்கார் கோத்திரத்தார் தங்கள் வாழ்வின் எல்லா நிலைகளிலும் மகிழ்ச்சியான, வசதியான, நிறைவான வாழ்வை விரும்பி, அதற்காகத் தங்கள் தோளைச் சாய்த்து பகுதிகட்டுவதற்கு ஆயத்தமானவர்கள் என்பதைத் தகப்பனின் ஆசீர்வாதம் கூறுகிறது.

### தலைவனின் தரிசனம்:

தலைவனின் தரிசனத்தில் இசக்காருக்கும், செபுலோனுக்கும் ஒரே கருத்து வலியுறுத்தப்படுகிறது. அதாவது ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடும்படியாகவும், கடல்களிலுள்ள சம்பூரணத்தையும், மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அனுபவிப்பதற்காகவும் என்று உபா. 33:19இல் வாசிக்கிறோம். இந்த தரிசனத்தை செபுலோன் கோத்திரத்தார் வெளியே புறப்பட்டு, கடல்வழி வர்த்தகம் மூலம் நிறைவேற்றி ஆன்மீக நிதி ஆதாரம் அளித்ததைக் கடந்த இதழிலே வாசித்தோம். இத்தரிசனத்தை இசக்கார் கோத்திரத்தார் தங்கள் "கூடாரங்களில் தங்கியிருந்து" செய்ய வேண்டும் என்று (உபா. 33:18) கூறப்பட்டுள்ளது. பொதுவாக "கூடாரத்தில் தங்கியிருத்தல்" என்பது தேவனுடைய பிரசன்னத்தில் அமர்ந்திருப்பதையும் (யாத். 33:7), உலகத்தில் உள்ளவைகளில் மனதைச் செலுத்தாமல், தேவனின் நன்மையில் திருப்தியும், மகிழ்ச்சியும் அடைவதையும் (லூக்கா 10:39) அடையாளப்படுத்துகிறது. இவ்வாறு இசக்கார் கோத்திரத்தார் தங்கள் கூடாரங்களிலிருந்து செய்த விவசாயப் பணியின் பலன்கள் மூலமாகவும் (நீதி. 3:9) சிறப்பாக கற்றறிந்த தோராவுக்கு கற்றுக் கொடுப்பதன் மூலமாகவும், இஸ்ரவேல் மக்களை நல்வழிப்படுத்தி நீதியின் பலிகளைச் செலுத்தும்படியான ஊழியத்தை நிறைவேற்றினார்கள்.

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# SCALE (RULER)

MRS. JOYLINE JEROME

My dear teen Boys and Girls, happy June month greetings to you and your family. Summer heat இன்னும் கம்மி ஆகல, ஆனா School எல்லாம் Reopen ஆக போகுது. Vacation modeக்கு End card போட வேண்டிய time வந்தாச்சு. இனி நம்ம focus எல்லாம் subjects மேலதான் இருக்கனும். Specialஆ Maths & Scienceஅ day oneல இருந்தே நாம concentrate பண்ணினாதான், போக போக interestingஆ இருக்கும். இந்த Teen page plan, நீங்க அடிக்கடி use பண்ணுற Geometry boxல இருக்கிற things தான். Last 5 monthsஅ compass, divider, protractor, set square 45° and 60°ன்னு எல்லாத்தையும் பத்தி பார்த்தோம். அந்தப்படி இந்த month நாம பார்க்க போறது Scale (Ruler).

Scale, ரொம்ப easyஆன, அதே நேரம் ரொம்ப Particalஆன instrument. Answer Scriptஅ decorate பண்ணுறதுல இருந்து 3D structure வரையுற வரைக்கும் Scale use பண்ணுறோம். Scaleலோட engineering application limitless. என்னதான் modern drafting tools and techniques நிறைய இருந்தாலும் quickஅ measurements check பண்ணுறதுக்கு scaleல தான தேடுவோம். சின்ன சின்ன household measurementல ஆரம்பிச்சு multistorey building வரைக்கும் எக்கச்சக்கமான areaல scale ஒரு useful ஆன instrumentஅ இருக்குது. நாம schoolல use பண்ணுற scale - plain scale அது steel, wood & fibreன்னு வேற வேற materialல availableஅ இருக்கும். அதே மாதிரி ஒவ்வொரு specific applicationக்கு ஏற்றமாதிரி நிறைய type of scale இருக்கு. Example Vernier Scale, Diagnol Scale, Architect Scale, Engineer's Scaleன்னு ஒவ்வொரு applicationsக்கும் ஏற்ற மாதிரி scale type's மாறுது. Drawing angles, Precision measurement, Building drawing, Engineering drawingன்னு scaleலோட applications wideஅ இருக்குது. குறிப்பா Building drawingல 10 மாடி building வரையறதுக்கு ஒரு A4/A0 size Paper போதும். இப்படி பண்ணுறது தான் Down Scale, அதாவது 1:100 ratioல structureவோட எல்லா Dimensionசையும் represent பண்ணி வரையுறது. So basicஅ architect ஒரு building plan வரையும்போது, original dimentionஅ 1:100வோ இல்ல 1:50 ratio downscale பண்ணி வரைவாங்க. இப்படி downscale பண்ணி வரைஞ்சாலும், downscale பண்ண dimensionஅ planல போடாம, அந்த building ஒரு original dimention தான் mention பண்ணுவாங்க. இப்படி பண்ணினாதான் field engineerக்கு plan சரியா புரியும், buildingவும் as per the plan உருவாகும்.

Okay, இப்போ Bible application time, நம்ம கிட்ட இருக்கிற scale ஒரு 1000 feet building heightஐ கூட, தன்னுடைய dimension ஆன 15 அல்லது 30cm வரை வச்சி downscale பண்ணி ரொம்ப accurateஅ represent பண்ணுறதுக்கு helpfulஆ இருக்குது. நான் firstடே சொன்னமாதிரி down scale values அதுல mention பண்ணமாட்டாங்க. எப்பவுமே original values தான் planல mention பண்ணுவாங்க. இன்றைய காலகட்டத்துல highly misunderstood ஆன ஒரு Christian concept தான், இந்த downscale understandingல பார்க்கப்போறோம். யாத்திராகமம் புத்தகத்துல மோசே கர்த்தரிடமிருந்து 10 commandments, கேட்டு stone tabletல அத inscribe பண்ணுனாங்க. (Kindly read Exodus 20). இந்த 10 commandmentsவும் God entire humanityஇல் follow பண்ணுறதுக்காக கொடுத்த instruction. இந்த 10 commandmentsசுமே rule கிடையாது, அது instructions. சரி first இப்போ rule & instructionsக்கான differentச பார்ப்போம். Red light போட்டா வண்டி நிக்கனும் என்கிறது rules, ஆனா எல்லாரும் follow பண்ணுறாங்களா? சரி அப்படி follow பண்ணலைனா என்ன ஆகபோகுது? ஒருவேளை accident ஆகலாம், police பிடிக்கலாம். இப்படியெல்லாம் ஒருவேளை நடக்கலாம். இல்ல இதுல எதுவுமே நடக்காம இந்த ruleஐ நம்மளால Break பண்ணவும் முடியும்.

நீங்க ஒரு gadget புதுசா வாங்கியிருக்கீங்க. அது கூடவே ஒரு manuelலும் வரும். அது சொல்லியிருக்கிறபடி செஞ்சாதான், அந்த gadget work ஆகும். அது fullஅ use ஆகனும்னா கண்டிப்பா instructionச follow பண்ணியே ஆகனும். So, 10 commandents are instructions, you have no option, just need to follow to live a Christ centred life style.

இன்னொரு விசயம் இன்னும் seriousஆ misleadingஆ பேசப்படுவது யாத். 20ல இருக்கிற 10 commandmentsஐயும் Jesus 2 commandmentsஆ கம்மிபண்ணிட்டாரு. இது இன்னும் கொஞ்சம் detailஆ பார்ப்போமா? வாசியுங்க மத். 22:37-39 "இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக; இது முதலாம் பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே." இது இயேசுகிறிஸ்து 10 commandmentsயையும் sum பண்ணி downscaleல சொன்னது. அதுக்கான proof தான் 40ஆம் வசனம்.

இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது. எப்படி downscale பண்ணப்பட்ட dimensions, original dimensions represent பண்ணுதே, இயேசுகிறிஸ்துவும் அப்படியே இதைச் சொல்லுகிறார். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூருவாயாக அப்படின்னு மட்டும்தான் இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். எப்படி முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்பு கூற வேண்டும் என்கிற details எல்லாம் first 5 commandmentsல சொல்லப்பட்டிருக்கிறது. 10 commandmentsல, first 5 God and Man relationship பத்தின instruction. அதே மாதிரி next 5, Man to Man relationship பத்தி சொல்லுற instructions.

இப்போ உங்களுக்கு clearஆ புரிஞ்சிருக்கும் என்று நம்புகிறேன். இயேசுகிறிஸ்து எதையும் குறைக்கவோ, கூட்டவோ இல்லை. அவர் சகலத்தையும் நிறைவேற்றுகிறவராக வந்தார். Bibleல நிறைய sections & chapters இருந்தாலும், everything is connected. Bibleல இருக்கிற எல்லா chaptersவும் ஒரு chainல இருக்கிற pearls. இப்படி எல்லா pearlsயையும் invisibleஆ connect பண்ணுற thread தான் Christ. OTல Christ shadowவா இருப்பாங்க. நாம தேடி கண்டுபிடிக்க வேண்டும். ஆனா NTல Christ has become flesh.

So teens, Bibleஅ unified bookஆ பாருங்க. இது OT எனக்கு தேவையில்லைன்னு நினைக்காதீங்க. Bibleல ஒவ்வொரு pageலையும் கர்த்தர் உங்களோடு பேசுவார். இதே மாதிரி இன்னொரு interesting ஆன தலைப்போடு next month சந்திக்கலாம். Untill then see you next month, Bye!

NO PLACE TO CRY

# டோரி வான்ஸ்டோன்



இது ஓர் உண்மை சம்பவம். டோரி, 12 ஜனவரி 1922இல் Portland, Clackamas Country, Oregon, USAவில் பிறந்தாள். இவருடைய தகப்பனார் பெயர் லூயிஸ் அகஸ்டஸ், தாயார் லாரா. இவருடைய தகப்பனார் 21 வயதிலேயே வீட்டை விட்டு வெளியே போய்விட்டார். டோரி யாராலும் நேசிக்க முடியாத அளவுக்கு மிகவும் அசிங்கமாக இருந்தாள். இவள் தன்னுடைய அம்மாவின் மடியில் உட்காரும்போதோ, கட்டி பிடிக்க முயலும்போதோ “உன் தங்கையைப் போல நீ அழகாக இல்லை” என்று அவளைத் தள்ளிவிடுவாள். அப்படி தன்னுடைய அம்மா நடந்து கொள்ளும் போதெல்லாம் டோரி தனிமையாக தன்னை ஒளித்துகொண்டு அழுவாள்.

அம்மா வேலைக்குச் சென்றிருந்தபோது, வீட்டில் தனிமையாக கழித்த நீண்ட மணி நேரங்களே டோரியின் ஆரம்பகால நினைவுகளாகும். தனது ஆறு வயதிலேயே நாள் முழுவதும் தன் தங்கையைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பில் விடப்பட்டாள். பெரும்பாலும் அவளுடைய அம்மா மாலை தன்னுடைய வேலையை முடித்து இருட்டின பிறகே வருவார். டோரிக்கு தன்னுடைய வீட்டின் விளக்குகளைப் போட அனுமதிக்கப்படவில்லை. அதனால் டோரியும், அவளுடைய தங்கையும் இருட்டில் அம்மா எப்போது வீட்டுக்கு வருவார்கள் என்று ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு சரியான உணவும் கிடையாது. அப்பாவுடன் இல்லாததால், பெரும் பொருளாதார மந்த நிலை. இதனால் 21 வயதான இவர்களின் அம்மா இரண்டு பிள்ளைகளையும் தனியாக பராமரிக்க வேண்டியதாயிருந்தது. மேலும் டோரி தன் அம்மாவின் விரக்தியின் முழு சுமையையும் தாங்கினாள். ஒருநாள் அம்மா “தன்னுடைய இரண்டு பிள்ளைகளிடம் என்னால் உங்களைப் பார்த்துக் கொள்ள முடியாது என்று சொல்லி அனாதை இல்லத்தில் விட்டுவிட்டாள். அம்மா அவர்களுக்காக வருத்தப்படவில்லை.

டோரிக்கு வீட்டில் வாழ்ந்ததை விட, அனாதை இல்லத்தில் (அனாதை இல்லம் கலிபோர்னியாவில் ஒக்லாந்தில் உள்ளது) வாழ்வது மிகவும் கடினமாக இருந்தது. அங்கே தங்கியிருந்த ஏழு வருடங்களும், படுக்கைக்குச் செல்வதற்கு முன் ஒவ்வொரு இரவும் தவறாமல் அடிக்கப்பட்டாள். அவள் தங்கியிருந்த அனாதை இல்லத்திற்கு குழந்தைகளை தத்தெடுப்பதற்காக வருவார்கள். எல்லாக் குழந்தைகளும் அவர்கள் முன்பு வரிசையாக நிறுத்தப்படுவார்கள். பார்வையாளர்கள் அழகான குழந்தைகளைப் பார்த்தே பேசுவார்கள். டோரியை யாரும் பார்த்துப் பேசவோ, பார்க்கவோ விரும்பமாட்டார்கள். அங்குள்ள குழந்தைகள் ஒவ்வொருவராக புதிய பெற்றோருடன் போய்விடுவார்கள். ஆனால் டோரியை யாரும் பார்க்கமாட்டார்கள். “யாரும் என்னிடம் அன்பு செலுத்த முடியாத அளவிற்கு அசிங்கமானவள் என்று தன்னை நினைத்துக்கொள்வாள்.

ஒரு நாள் அருகில் உள்ள பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில மாணவர்கள், வேதாகமக் கதைகளைச் சொல்வதற்கும், இயேசுவின் அன்பை பற்றி குழந்தைகளிடம் பேசுவதற்கும் அந்த அனாதை இல்லத்திற்கு வந்தனர். அவர்கள் குழந்தைகளுக்கு இயேசுவின் அன்பையும், இயேசு உங்களை நேசிக்கிறார் என்றும் உறுதியாக சொன்னார்கள். இயேசுவால் நான் நேசிக்கப்படுகிறேனா? என்னையும் இயேசுவால் நேசிக்க முடியுமா? என்று டோரி நினைத்தாள். டோரி முதல்முறையாக ஜெபித்து, இப்படியாக சொன்னாள் “இயேசுவே நீர் என்னை நேசித்தால், என்னை எடுத்துக் கொள்ளும்”. இரண்டு வாரங்களுக்குள் தேவன் அந்த அனாதை இல்லத்திற்கு ஒரு புதிய கிறிஸ்தவ ஊழியரைக் கொண்டு வந்தார். அவர் டோரியைத் தன்னுடன் தேவாலயத்திற்கு வருமாறு அழைத்தார். அவளும் தன்னால் கற்றுக்கொள்ள முடிந்த அனைத்தையும் கற்றுக் கொண்டாள். அந்த புதிய பொறுப்பாளர், அவள் இதுவரை பெற்றிராத ஒரு சிறிய புதிய ஏற்பாட்டை அவளுக்குக் கொடுத்தார். அவள் அதை மீண்டும் மீண்டும் வாசித்து முக்கிய பகுதிகளை அடிக்கோடிட்டு மனப்பாடம் செய்தாள்.

டோரி தனது 13ஆவது வயதில் கர்த்தர் மீது விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக்கொண்டாள். இவள் அனாதை இல்லத்திலிருந்து ஒரு வளர்ப்பு இல்லத்திற்கு அனுப்பப்பட்டாள். அங்கு அனுபவித்த கொடுமை விவரிக்கமுடியாதது. அந்த வளர்ப்பு இல்லத்தில் வாசலில் மார்பிலும், கைகளிலும் முடி அடர்த்தியாக இருந்த ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தான். அவள் தலைமுடி கலைந்து காணப்பட்டது. அவன் நீதான் டோரியா? உள்ளே வந்து உட்கார் என்று கத்தினான். நான் உட்கார்ந்து சில கணங்களே ஆன நிலையில், அவன் எங்களுக்கு இரண்டு விதிகள் இருக்கின்றன, முதல் விதி “நீ இனி ஒருபோதும் எங்களுடன் மேஜையில் அமர்ந்து சாப்பிட அனுமதி கிடையாது”. இரண்டாம் விதி “நாங்கள் நிறைய மீன் சாப்பிடுவோம். ஆனால் மீனின் தலையும், வாலும் உனக்கு தான். மீனின் நடுப்பகுதி குடும்பத்தினருக்கு. நான் ஒருபோதும் அவர்களுடன் மேஜையில் அமர்ந்து சாப்பிட்டதில்லை. ஒரு

MR. B. BENJAMIN

மூலையில் அமர்ந்து சாப்பிடுவேன், அல்லது வீட்டிற்கு வெளியே சாப்பிடுவேன். அது மிகவும் கொடுமையாக இருந்தது. அந்த வீட்டில் இருக்கும் அனைவரும் என்னை அடிப்பார்கள். கொடுமை நிறைந்த அந்த வீட்டில், மாதத்திற்கு ஒரு நாள் மட்டுமே நான் குளிக்க அனுமதிக்கப்பட்டேன். எட்டு வாரங்களுக்கு ஒரு முறை மட்டுமே என் தலை முடியைக் கழுவ அனுமதிக்கப்பட்டேன்.

நான் ஒரு அழுக்கான அருவருப்பான சிறுமி என்று உங்களிடம் சொன்னால் என்னை நம்புங்கள். ஏனென்றால் நான் அப்படித்தான் இருந்தேன். நான் மக்களைக் கடந்து செல்லும்போதெல்லாம் என்னிடமிருந்து துர்நாற்றம் வீசியது. என்னால் தலைக்குக் குளிக்க முடியாததால் என் தலை முடி சிக்கலாகவும், பேன்கள் நிறைந்ததாகவும் இருந்தது. என் தலைமுடியைச் சீவ முடியாததால், தலைமுடியை முழுவதுமாக மழித்து விட்டு, ஒரு துண்டை என் தலையில் கட்டிக்கொண்டு பள்ளிக்குச் செல்வேன். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தலையில் கட்டி இருக்கும் துண்டைக் கழற்றி விட்டு, அசிங்கமாக இருக்கிறாய், உன் மீது துர்நாற்றம் வீசுகிறது என்று பரியாசம் பண்ணுவார்கள். எனக்கு கதறி அழவேண்டும் போல் இருக்கும். ஆனால் அவர்கள் நான் அழுவதைப் பார்க்கக் கூடாது என்று அமைதியாக இருப்பேன்.

வேறு சில கொடுமை நிறைந்த விஷயங்களும் இங்கு நடந்தது. நான் படுத்திருக்கும் அறைக்குள் சில ஆண்களை அனுப்பி என்னை அழைத்துச் செல்ல சொல்வார்கள். அப்போது நான் பாலியல் துன்புறுத்தலுக்கும், கற்பழிப்புக்கும் உள்ளானேன். இத்தனை கொடுமையின் மத்தியிலும் நான் குளியல் அறையில் மண்டியிட்டு புதிய ஏற்பாட்டை வாசிப்பேன். அதில் எபிரெயர் 13:5இல் "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை" என்ற வசனமும் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" (பிலிப்பியர் 4:13) என்ற வசனங்களைப் படிக்கும்போது கர்த்தர் எனக்கு உதவுவார், நானும் வாழ்க்கையில் சாதிப்பேன் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தேன்.

மீண்டும் நான் இன்னொரு வளர்ப்பு வீட்டிற்கு அனுப்பப்பட்டேன். நான் இதற்கு முன்பாக இருந்த வீட்டில் என்ன நடந்ததோ, அதேதான் இங்கும் நடந்தது. இங்கு மாதத்தில் ஒரு நாள் தான் குளிக்க வேண்டும். நான் உள்ளே குளிக்க செல்லும்போது நான் எவ்வளவு தண்ணீர் குளிக்க எடுக்கிறேன் என்று பார்ப்பார்கள். ஆதலால் எனக்கு குளிக்கவே பயமாக இருக்கும். தனிமை என்பதே கிடையாது. நான் தேய்த்து குளிக்க ஒரு பழைய தோல் பெல்ட் தருவார்கள். அதைக்கொண்டே என்னை அடிப்பார்கள். நான் குளித்து ஈரமாக இருக்கும்போது அவர்கள் அந்த தோல் பெல்ட்டால் அடிக்கும்போது மிகவும் வலிக்கும். வலியைத் தாங்க முடியாத நான் வீட்டைவிட்டு வெளியேறினேன்.

நான் பின்பக்கமாக தேவாலயத்திற்குள் செல்ல முயற்சிப்பேன். என்னிடமிருந்து துர்நாற்றம் வீசுவதால் ஆலயத்திற்குள் உள்ளவர்கள் என்னை உள்ளே அனுமதிக்க மாட்டார்கள். நான் ஞாயிறு பள்ளிக்குச் செல்ல முயலும் போதெல்லாம், நான் உள்ளே வந்தால் அங்குள்ள பிள்ளைகள் நாங்கள் வெளியே போய் விடுவோம் என்று சொல்வதைக் கேட்டேன். ஆகையால் நான் வெளியே நின்று கொண்டிருப்பேன்.

**நாம் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாமல் வாழும் வாழ்க்கையானது பாவத்தின் வாழ்க்கையே.**

**-வில்லியம் வில்பர்ஃபோர்ஸ்**

சில வாரங்கள் கழித்து நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டிய சூழ்நிலை வந்தது. அங்கே என் அம்மா நின்று கொண்டிருந்தார்கள். நான் அவரிடம் ஓடவிருந்தேன். ஆனால் அவருடைய பார்வை என்னை அப்படியே ஸ்தம்பிக்கச் செய்தது. நீதிபதி என் தாயாரிடம் இது உன்னுடைய மகளா என்று மூன்று முறை கேட்டார். இறுதியாக ஆம் அவள் என் மகள் தான் என்றார். டோரியின் தாயார் நீதிபதியிடம் "நான் உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அவள் பிறப்பதற்கு முன்பே அவளை நான் அழித்திருக்க வேண்டும். நீங்கள் அவளை இப்போது என்னிடம் ஒப்படைத்தால் நான் அவளைக் கொன்றுவிடுவேன் என்றாள். அந்த வார்த்தையைக் கேட்ட டோரி அதிர்ந்து போனாள். டோரியின் கையில் முழு வேதாகமம் இருந்தது. அதில் "என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்" (சங்கீதம் 139:13) என்ற வசனம் அவளுக்கு நினைவில் வந்தது.

பிறகு டோரி ஒரு அன்பான குடும்பத்தில் பணிப்பெண்ணாக வேலைக்குச் சேர்ந்தாள். அதன் மூலம் தனது தங்கும் செலவுகளை சமாளித்துக் கொண்டு, படிப்பையும், கலை குறித்தும் படிக்க முடிந்தது. அதனால் இவளுக்கு நல்ல சம்பளத்துடன் கூடிய கட்டிடக்கலைஞர்களுக்கான வரைபடங்களை வரையும் வேலை கிடைத்தது. டோரிக்கு செஞ்சிலுவை சங்கத்தினால் நடத்தப்பட்ட மிஷனெரி கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அந்த கூட்டத்தில் டார்லின் ரோஸ் செய்தியாளராக வந்திருந்தார்கள். அவர்கள் தன்னுடைய ஊழியத்தின் அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார்கள். நியூகினியாவில் நற்செய்தியைப் போதித்த குற்றத்திற்காக டார்லின் எட்டு ஆண்டுகள் சிறையில் கழித்தார்; அதில் நான்கு ஆண்டுகள் ஜப்பானிய தடுப்பு முகாமில் இருந்தார். அவர் அடைந்த துன்பம் மற்றும் வேதனைகளைப் பகிர்ந்துகொண்டார். இத்தனை துன்பத்தையும் அவர் சொன்ன பிறகு, அவர் அந்த சபையார் முன்பாக நின்று இயேசுவின் பொருட்டு நான் ஊழியத்தை மீண்டும் செய்வேன் என்று உறுதியாக அறிவித்தார். தேவனுடைய ஊழியத்தில் இவ்வளவு பாடுகளை அனுபவித்த டார்லின் மீண்டும் தேவனுடைய பணியைச் செய்வேன் என்று சொன்னது டோரியின் இருதயத்தில் ஆழமாக பாதித்ததின் விளைவாக தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்தாள். அந்த கூட்டம் முடிந்த பிறகு டோரி, டார்லினைச் சந்தித்து பேசினாள். டோரியின் கதையைக் கேட்ட டார்லின் பெற்றோர் "இனிமேல் நாங்கள் இருக்கிறோம்" என்று கூறி டோரியை தங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்று, தங்க இடம் கொடுத்தனர். மேலும் டார்லின், டோரிக்கு நம்பிக்கைக்குரிய தோழியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தாள்.

நியூக்கினியாவுக்குச் செல்ல வேண்டும் என்ற டோரியின் விருப்பத்தைப் பகிர்ந்து கொண்டு, அவளை நேசித்த ஒரு கணவனைத் தேவன் அவளுக்குக் கொடுத்தார். தேவனுடைய பெரிதான உதவியினால் (Dari People Group) டானி மக்கள் மத்தியில் ஊழியம் செய்வதற்காகப் புறப்பட்டுச் சென்றாள். அங்குள்ள மக்கள் பெரும்பாலும் கொடுமையானவர்களாகவே இருந்தனர். ஆனால் டோரிக்குக் கொடுமையைக் கொடுப்பதும், பெறுவதும் எப்படி என்று அறிந்திருந்ததால் அப்படிப்பட்ட மக்களுக்கு இயேசுவின் அன்பைப் பகிர்ந்துகொண்டு, மிருகத்தனமாக வாழ்ந்த மக்களைப் புதுவாழ்வு பெற்ற மனிதர்களாக மாற்றினாள்.

# மீகா

## கிராமபுற தீர்க்கதரிசி



MR. ISAAC KAMALESH

2nd WEEK MESSAGE - OT - தரிசன களம்

மீகா இவர் ஒரு கிராமத்து பிரசங்கி, வீரியமிக்க தமது ஊழியத்தால் 'கிராமபுற தீர்க்கதரிசி' என்ற பெயர் பெற்றார். சாதாரண குடும்பம் எளிமையான வாழ்க்கை அடித்தட்டு மக்களோடு வாழ்ந்த ஜீவியம். ஆனால் இவர் களம் கண்டதோ தேசத்து தலைவர்கள், அரசு ஊழியர்கள், உயர் பதவி வகித்தவர்கள், அரசியல் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், ஆலய பொறுப்பாளர்கள், ஏன் அக்காலத்து தீர்க்கதரிசி, நீதிபதி என்று அனைவருக்கும் தேவனுடைய வார்த்தையை எச்சரிக்கையாகக் கொடுத்தவர். அப்படி அவர் கண்ட வீரியமிக்கக் களத்தை இந்த மாத செய்தியில் நாம் பார்க்கலாம். ஏழு அதிகாரங்கள் கொண்ட இந்த பகுதியில் முதல் ஆறு அதிகாரம் மீகாவின் பிரசங்கங்களும், தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது.

மீகா எருசலேமுக்கு தென்மேற்கு திசையில் சுமார் 25 மைல் தொலைவில் பெலிஸ்திய எல்லைக்கு அருகில் 'மோரேசேத்' (Moresheth) என்னும் ஊரில் வாழ்ந்தார். இவர் ஏசாயாவின் சமகாலத்தவர். வடக்கு ராஜ்யத்திற்கு தேவன் அனுப்பிய கடைசி தீர்க்கதரிசி இவர் தான். யூதா மற்றும் இஸ்ரவேல் என இரு ராஜ்யங்களுக்கும் அனுப்பப்பட்ட ஒரே தீர்க்கதரிசி இவர் தான் என்பதும் குறிப்பானது.

இவர் அந்த ராஜ்யங்களின் தலைநகரங்கள் ஆன எருசலேம் மற்றும் சமாரியா இடங்களில் ஊழியம் செய்தார். இவருடைய தீர்க்கதரிசனங்களில் சமாரியாவின் வீழ்ச்சி, அசீரிய படையெடுப்பு, எருசலேமின் இறுதி வீழ்ச்சி, தேவாலய அழிவு, பாபிலோனிய சிறை பிடிப்பு, சிறையிருப்பில் இருந்து திரும்புதல் இப்படி எண்ணற்ற காரியங்கள் அடங்கியிருக்கிறது. நம் அனைவருக்கும் தெரிந்தபடி கிறிஸ்மஸ் காலங்களில் அதிகம் வாசிக்கும் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்த தீர்க்கதரிசனமும் இதில் அடங்கி இருக்கிறது. ஆம் பெத்லகேமில் கிறிஸ்துவின் பிறப்பு, கிறிஸ்துவின் எதிர்கால ஆட்சி, இரண்டாம் வருகை என்று அனைத்தையும் இவர் குறிப்பிடுகிறார். மூன்று சந்தர்ப்பங்களில் மீகாவின் வார்த்தைகள் மேற்கோள் காட்டப்படுகிறது; எருசலேமுக்கு வந்த ஞானிகளால் (மத். 2:5, 6; மீகா 5:2), பன்னிரு சீடர்களை அனுப்பிய போது இயேசுவால் (மத். 10:35, 36; மீகா 7:6), யூதாவின் மூப்பர்களால் (எரே. 26:18; மீகா 3:12). இந்த ஏழு அதிகாரங்களையும் நாம் வாசிக்கும் பொழுது ஒரு தேவ மனிதனுக்கு எவ்வளவு வல்லமை உண்டு, எவ்வளவு தீவிரமாய் ஊழியம் செய்ய வேண்டும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அஞ்சா நெஞ்சம், உறுதி கொண்ட மனசு, தைரியத்தோடு கடவுளுடைய வார்த்தையை உச்சரிக்கும் மனப்பாங்கு, இது தேவன் மீகாவுக்கு கொடுத்த அளவிடப்பட முடியாத ஒரு கிருபை என்று சொல்லலாம். இவர் ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்தாலும், இவருடைய கிராமப்புறப் பண்பு மெச்சிக்கொள்ளத்தக்கது. ஏனென்றால் அதே காலத்தில் வாழ்ந்த ஏசாயா அரண்மனை பிரசங்கியாக இருந்தார்.

யோத்தம், ஆகாஸ் மற்றும் எசேக்கியா ராஜாக்களின் ஆட்சிகாலத்தில் மீகா தீர்க்கதரிசனம் உரைத்தவர். சமூக அநீதிகள் மற்றும் மதமார்க்கத்தில் இருந்த ஊழல் குற்றங்களை எடுத்துரைத்ததினால், ஆமோஸ் மற்றும் அவருடைய சமகாலத்தில் வடக்கு பகுதியில் இருந்த ஓசியா மற்றும் ஏசாயா கற்றுத்தந்த கருத்துக்களை இவரது வார்த்தைகள் புதுப்பித்தது. இந்த புதுப்பித்தல் ஆகாஸின் (2ராஜா.16:10-18) குணாதிசயத்துடன் பொருந்தியது. மேலும் அவருடைய மகன் எசேக்கியா ராஜாவின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு (2நாளா.29, 31) வித்தாக அமைந்தது என்று கூறலாம். விடாப்பிடியாக பொல்லாப்பையே செய்து வந்த ஜனங்களுக்கு நியாயத்தீர்ப்பின் செய்தியை அறிவித்து வந்ததே மீகாவின் தலையாய செய்தி. மீகா தீர்க்கதரிசன செய்தியினை நியாயப்பிரமாண அடிப்படை வார்த்தைகளால் அறிவித்தார் (1:2; 6:1, 2). இவருடைய தீர்க்கதரிசனம் மூன்று அடுக்கு சுழற்சிகளாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் "செவிகொடுத்து கேளுங்கள்" என்ற அறிவுரையுடன் ஆரம்பிக்கின்றன.

மீகா பட்டியலிட்ட அக்கிரமங்களை இங்கே பார்ப்போம். அதை யாரிடம் சொன்னார் என்பதை ஏற்கனவே மேலே சொல்லிவிட்டோம், பட்டியல் இதோ: உண்மையான தேவனை விட்டு விக்கிரகங்களை வணங்குதல், மனித கைகளால் செய்யப்பட்ட தெய்வங்கள் மேல் நம்பிக்கை வைப்பது, தீய திட்டங்களை வகுத்தல், பிறரின் வீடுகளையும், நிலங்களையும் பறித்துக்கொள்ளுதல், பலவீனர்களைச் சுரண்டுதல், பெண்களையும், பிள்ளைகளையும் அவர்களின் வீடுகளில் இருந்து விரட்டுதல், அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துதல், மக்களிடம் இரக்கமின்றி நடந்து கொள்தல், லஞ்சம் வாங்குதல், நீதியைப் புரட்டிப்போடுதல். பணத்திற்காக ஊழியம் செய்தல், மக்களுக்கு பிடித்த செய்திகளை மட்டும் கூறுதல், லாபத்திற்காக போதித்தல், தேவ ஊழியத்தை வருமானமாக மாற்றுதல், பாவத்தில் வாழ்ந்துகொண்டு பலிகளைச் செலுத்துதல், உள்ளத்தில் கீழ்ப்படிதல் இல்லாமல் வெளிப்புற ஆராதனை செய்தல். மோசடியான அளவுகோல்களைப் பயன்படுத்துதல், வாடிக்கையாளர்களை ஏமாற்றுதல், பொய் பேசுதல், வஞ்சகமாக நடந்து கொள்தல், ஓமிரியும் ஆகாபும் செய்த தீய வழிகளைப் பின்பற்றுதல், நண்பர்களிடையே துரோகம், குடும்ப உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் எதிராக நிற்றல் என மீகாவின் வார்த்தைகள் எல்லா தரப்பு மக்களையும், தலைவர்களையும் எச்சரித்தது.

தேவன் அநீதி, ஊழல், போலித்தனம், விக்கிரக ஆராதனை ஆகியவற்றை வெறுக்கிறார்; ஆனால் நியாயம் Action-to do justice, கிருபை Affection-to love kindness, மனத்தாழ்மை Association-to walk with God ஆகியவற்றில் பிரியப்படுகிறார். (மீகா 6:8) "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்".

மீகா புத்தகத்தின் சுருக்கத்தை சொல்ல வேண்டுமென்றால் முதல் ஆறு அதிகாரங்களும் தன்னை சுற்றி இருக்கிற ஜனங்களை குறித்தும், பட்டணங்களை குறித்தும் தேவ எச்சரிப்பு வரப்போகும் தண்டனை (The Outward Look). கடைசி ஒரு அதிகாரம் மீகாவின் தனிப்பட்ட சிந்தனையை எடுத்துக்காட்டுகிறது (The Inward Look). கடைசி அதிகாரத்தின் கடைசி 14 வசனங்கள் மீகாவின் மன்றாட்டு (The upward Look) குறிப்பிடப்படுகிறது. இந்த மன்றாட்டில் அவர் ஆபிரகாமின் உடன்படிக்கையை நினைவுபடுத்துகிறார். செய்தி மிக வல்லமையானது. இந்த புத்தகத்தை இந்த சிந்தையோடு குறைந்தது இரண்டு முறை வாசித்து பார்ப்போம். ஜெபத்தோடு வல்லமையான ஊழியங்களை செய்ய முற்படுவோம். எதிர்கால நம்பிக்கை கிறிஸ்துவிலே என்ற நிச்சயத்தோடு முன்னேறுவோம். தேவன் நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவராக. ஆமென்!!!

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!

## ஆதம்பூர் புலம்
## ஹிசார் மாவட்டம்
## ஹரியானா

### ஆதம்பூர் அறிமுகம்:

ஆதம்பூர் என்பது ஹரியானா மாநிலத்தின் ஹிசார் மாவட்டத்தில் உள்ள ஒரு தாலுகா / பிளாக் ஆகும். இது ஆதம் கான் என்ற பதான் தலைவரின் பெயரால் அழைக்கப்படுகிறது. ஆதம்பூர் விமானப்படை தளம் பிரிட்டிஷாரால் 1900ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கட்டப்பட்டது. இது இந்தியாவின் இரண்டாவது பெரிய விமானப்படைத் தளமாகும். 2011ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 20,922 ஆகும்.

ஆதம்பூரில் பல அரசு அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் BDO அலுவலகம், நகராட்சி அலுவலகம், காவல் நிலையங்கள், 132 KV மின்சார துணை நிலையம், வேளாண்மை சந்தைக் குழு, மார்க்கட் கமிட்டி, விவசாயிகள் ஓய்வு மனை, மகளிர் மற்றும் குழந்தைகள் நல அலுவலகம், பிளாக் வேளாண்மை துறை அலுவலகம் மற்றும் PWD அலுவலகம் ஆகியவை அடங்கும்.

ஜாட், பிஷ்னோய் மற்றும் ஓட் ராஜ்புத் மக்கள் இப்பகுதியில் முக்கிய மக்கள் குழுக்களாக உள்ளனர். அவர்கள் பேசும் மொழிகளில் 70% பக்ரி, 20% ஹரியான்வி மற்றும் 10% பஞ்சாபி அடங்கும்.

### ஓட் ராஜ்புத் மக்கள் அறிமுகம்:

ஓட் ராஜ்புத் (Odd Rajput / Oad / Orh / Odh Rajput) சமூகம் வடமேற்கு இந்தியா (ராஜஸ்தான், குஜராத், பஞ்சாப், ஹரியானா) மற்றும் பாகிஸ்தானில் வாழும் இந்தோ-ஆரிய க்ஷத்திரியர்கள் சமூகமாகும் (Indo-Aryan Kshatriya group). இந்த சமூகம் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவராகவும், பேரரசர் சாகர் மற்றும் ஓத்ரா மன்னர் போன்றோரின் வழித்தோன்றலாகவும் தங்களைக் கருதுகின்றனர்.



### கலாச்சாரம் மற்றும் மக்கள் தொகை:

- **மரபுகள்:** அவர்கள் "ஓட்" அல்லது "ஓட்கி" என்ற மொழியைப் பேசுகின்றனர். இந்த மொழியில் மராத்தி, குஜராத்தி, மார்வாரி மற்றும் பஞ்சாபி மொழிகளின் கலவைகள் காணப்படுகின்றன. மேலும், அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்களை நினைவுகூர்ந்து கொண்டாடுகின்றனர். "ஓட் ராஜ்புத் தர்மசாலா" எனப்படும் பாரம்பரிய சமூக மையங்களையும் பராமரித்து வருகின்றனர்.
- **தொழில்:** பாரம்பரியமாக அவர்கள் கட்டிடத் தொழிலாளர்கள், தச்சர்கள் மற்றும் கூலி தொழிலாளர்களாக இருந்தனர். தற்போது அவர்கள் பல்வேறு தொழில்கள், அரசு சேவைகள் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
- **சமூக நிலை:** ராஜஸ்தான் மாநிலத்தில் இக்குழு OBC (Other Backward Classes) ஆகவும், அருகிலுள்ள சில மாநிலங்களில் Scheduled Caste ஆகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.
- இவர்கள் பொதுவாக இன்னும் சுவிசேஷம் எட்டாத மக்களினங்களாக கருதப்படுகின்றனர். இம்மக்களுள் கிறிஸ்தவர்கள் 0.1% க்கும் குறைவாகவே உள்ளனர்.

### FMPB ஊழியம்:

இந்த மக்களிடையே ஜம்மு, ராஜஸ்தான் மற்றும் ஹரியானா போன்ற இடங்களில் அதிக விசுவாசிகள் உள்ளனர். இங்கு சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பும் கிடைத்துள்ளது. வடஇந்தியாவில் பழங்குடியினரல்லாத விசுவாசிகள் அதிகமாக உள்ள மாநிலமாக ஹரியானா உள்ளது.

### சாதகமான சூழ்நிலை:

பதேஹாபாத் மற்றும் ஹிசார் போன்ற அருகிலுள்ள பகுதிகளில் ஏற்கனவே பணித்தளங்கள் உள்ளன. அருட்திரு. சுதர்சன் தாமஸ் அவர்கள் ஹரியான்வி மொழியில் வேதாகம மொழிபெயர்ப்பு பணியைச் செய்து வருகிறார்கள்.

### ஜெபக் குறிப்புகள்:

1. ஆதம்பூரை ஒரு துணை பணித்தளமாக ஆரம்பித்தோம். ஆனால் இன்றுவரை ஒரு முழுநேர மிஷனெரியை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். தேவன் சரியான ஊழியக்காரரை ஏற்படுத்தித் தர ஜெபிப்போம்.
2. ஓட் ராஜ்புத் மக்களிடையே தேவன் பெரிய எழுப்புதலைக் கட்டளையிடும்படியாய் ஜெபிப்போம்.
3. கடினமான சூழ்நிலைகளின் நடுவிலும் அங்குள்ள விசுவாசிகள் உறுதியாக நின்று, விசுவாசத்தில் பலப்பட ஜெபிப்போம்.
4. ஓட் ராஜ்புத் மக்களின் தாய்மொழியில் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், அவர்கள் இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ளவும் மன்றாடி ஜெபிப்போம்.

Mr. Benjamin & Dr. Ahima

# காங்கோ

காங்கோ ஜனநாயகக் குடியரசு (டி.ஆர்.சி) என்பது ஒரு பரந்த மத்திய ஆப்பிரிக்க நாடாகும். இது ஆப்பிரிக்க கண்டத்தின் இரண்டாவது பெரிய நாடாகும். மேலும், இது தனது பிரம்மாண்டமான காங்கோ படுகை மழைக்காடுகள், உலகின் ஆழமான நதியான காங்கோ மற்றும் அளவற்ற கனிம வளங்களுக்காக அறியப்படுகிறது. இதன் பாரம்பரியம் பான்டு இராஜ்யங்கள் (Bantu kingdoms), காலனித்துவ வரலாறு (Colonial history) மற்றும் பல்லுயிர்ப் பெருக்கத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. மேலும், இது ஐந்து யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தளங்களைக் கொண்டுள்ளது.

**தலைநகரம்** : பிராஸ்ஸாவில்
**நாணயம்** : மத்திய ஆப்பிரிக்க சிஎஃப்ஏ பிராங்க் (XAF)
**மொழிகள்** : பிரெஞ்சு (அதிகாரப்பூர்வ)
**அரசியல் அமைப்பு** : ஜனாதிபதி குடியரசு
**மக்கள் தொகை** : 115 மில்லியன்

## மத கண்ணோட்டம்:

- சுமார் 75-89% பேர் தங்களைக் கிறிஸ்தவர்கள் (கத்தோலிக்க, புராட்டஸ்டன்ட் மற்றும் சுதந்திர ஆப்பிரிக்கத் திருச்சபைகள்) என அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.
- காங்கோ ஜனநாயகக் குடியரசு (டி.ஆர்.சி) ஆப்பிரிக்காவில் கத்தோலிக்கர்களின் ஒரு முக்கிய கோட்டையாகும். அதன் மக்கள்தொகையில் சுமார் 47-50% (சுமார் 55 மில்லியன் மக்கள்) கத்தோலிக்கர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டின் நிலவரப்படி, 48 மறைமாவட்டங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பாதிரியார்களுடன் 52 மில்லியனுக்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் இருந்தனர்.
- கிம்பாங்கு என்பவரால் நிறுவப்பட்ட கிம்பாங்குயிஸ்ட் திருச்சபை (Kimbanguist Church), ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய சுதந்திரமான, ஆப்பிரிக்கர்களால் தொடங்கப்பட்ட திருச்சபைகளில் ஒன்றாகும். இதில் சுமார் 6 மில்லியன் விசுவாசிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சிறப்பு ஜெபக் குறிப்பு: கிவு (Kivu) மற்றும் இடுரி (Ituri) போன்ற பகுதிகள் இனக் கலவரங்கள், கனிம வளப் போராட்டங்கள் மற்றும் ஆயுதக் குழுக்களின் ஆதிக்கம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் சமூகங்களைப் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, அதற்குப் பதிலாக அச்சத்தையும், வறுமையையும், இடப்பெயர்ச்சியையும் பரப்புகின்றன. அதிகாரத்திற்காகக் குழுக்களிடையே வன்முறை தொடர்வதால், பொதுமக்கள் பாதுகாப்பின்மையில் சிக்கித் தவிக்கின்றனர். இந்த மக்கள் சமாதானம் பெற்று, நீதியின் தேவனை அறியும்படி ஜெபிப்போமாக. மேலும், அவர்களுடைய வாழ்க்கை ஆன்மீக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மீண்டும் கட்டியெழுப்பப்படவும் ஜெபிப்போமாக.



**காங்கோவிற்கான ஜெபக்குறிப்புகள்:**

### 1. பொதுமக்களுக்கான பாதுகாப்பு :

- போர் முடிவடையவும், இந்தத் தாக்குதல் நடத்தியவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு மாறவும் ஜெபிப்போம்.
- தொடர்ந்து நடைபெற்று வரும் வன்முறைக்கு மத்தியில், குடும்பங்கள் மற்றும் திருச்சபை உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
- தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து துயருற்றிருப்பவர்களுக்கு இயேசு ஆறுதல் அளிக்கவும், பாலியல் வன்கொடுமை, மன அதிர்ச்சி மற்றும் கைவிடப்படுதல் ஆகியவற்றால் துன்புறுபவர்கள் குணமடையவும் ஜெபிப்போம்.

காங்கோவில் பணி சார்ந்த சம்பவம்: சலேசியன் மிஷன்ஸ் மற்றும் பிற கிறிஸ்தவ அமைப்புகள் காங்கோ ஜனநாயகக் குடியரசில், குறிப்பாக வடக்கு கிவு மற்றும் லுபும்பாஷியில் மிகவும் தீவிரமாகச் செயல்படுகின்றன. அவர்கள் இளைஞர் கூட்டங்கள், நற்செய்திப் பிரசாரங்கள் மற்றும் கல்வித் திட்டங்களைத் தவறாமல் ஏற்பாடு செய்கிறார்கள். ஜூன் 14, 2025 அன்று, தாக்கத்தை ஏற்படுத்திய அத்தகைய ஒரு கூட்டம் ஏறத்தாழ 4,000 மாணவர்களை ஈர்த்தது. ஜெபம், நற்செய்திப் பிரசாரம் மற்றும் ஐக்கியத்தின் மூலம், இந்த மாணவர்கள் நற்செய்தியால் ஆழமாகத் தொடப்பட்டு, இயேசு கிறிஸ்துவுக்காக வாழ வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை வெளிப்படுத்தினர்.

### 2. இளைஞர்களின் மீட்பு:

- வேலையின்மை மற்றும் வறுமையை எதிர்கொள்ளும் காங்கோ இளைஞர்கள், முறையான கல்வி மற்றும் சட்டப்பூர்வமான வேலைகளால் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று ஜெபிப்போம்.
- இந்த காங்கோ இளைஞர்கள் மூடநம்பிக்கையையும், கத்தோலிக்க சிலைகளையும் விட்டு விலகி, இயேசுவை ஏற்றுக்கொண்டு, தங்கள் குடும்பங்கள், பள்ளிகள் மற்றும் சமூகங்களில் நற்செய்தியைத் துணிச்சலாகக் கூறி, சாட்சிகளாக எழும்ப ஜெபிப்போம்.
- காங்கோவில் உள்ள கிறிஸ்தவ அமைப்புகள் முற்காலத்தை விட, இன்று மிகவும் இன்றியமையாதவையாக உள்ளன. நாற்பது லட்சத்திற்கும் அதிகமான உயிர்களைப் பறித்து, எண்ணற்ற உயிர் பிழைத்தவர்களை மன அதிர்ச்சிக்குள்ளாக்கிய ஒரு பேரழிவுக்கு காரணமான போருக்குப் பிறகு, மக்கள் இப்போது நல்லிணக்கம் மற்றும் அமைதிக்கான வழிகாட்டுதலுக்காகத் திருச்சபையை நாடுகின்றனர்.

இயேசுவின் இரக்கத்திற்காகவும், விசுவாசிகளுக்கு மத்தியில் தம்மை வெளிப்படுத்தி, துன்பத்தின் மத்தியில் நம்பிக்கையை அளித்ததற்காகவும் நாம் அவருக்கு நன்றி செலுத்துவோம். இன்னும் அதிகமான கிறிஸ்தவர்கள் இந்த அழைப்பிற்கு செவிசாய்த்து, ஊழியத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, குணமளித்தல் மற்றும் ஒற்றுமையின் ஊற்றாகிய இயேசுகிறிஸ்துவிடம் முழு மனதுடன் திரும்பிவர தொடர்ந்து ஜெபிப்போம்.

# பணித்தள பயிற்சி மைய ஊழியங்கள்

கிறிஸ்தவ மார்க்கத்தின் சிறப்பம்சங்களில் ஒன்று கற்பித்தலும், கற்றுக்கொள்வதும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இயேசுகிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம் இறுதிக் கட்டளையைக் கூறும்போதும் (மத். 28:18-20), அவர் கட்டளையிட்ட யாவையும் பிறருக்கு உபதேசிக்க (கற்றுக் கொடுக்க) கூறியுள்ளார். அப்போஸ்தலர்களும், நிருபங்கள் மூலமாகவும், நேரிடையாகவும் ஆதித் திருச்சபையின் விசுவாசிகளுக்கும், மூப்பர்களுக்கும், ஊழியர்களுக்கும் கற்றுக் கொடுத்ததை வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தள ஊழியங்களின் மூலம் இயேசுவை விசுவாசித்து, ஏற்றுக்கொண்டு, திருச்சபைகளில் தேவனை ஆராதித்து வரும் விசுவாசிகளையும், மூப்பர்களையும், ஊழியர்களையும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தியும், அவர்களைத் தலைமைத்துவங்களுக்கென்று ஆயத்தப்படுத்தியும், பல்வேறு மாநிலங்களில் பயிற்சி மையங்களையும் நிறுவியிருக்கிறோம். பிராந்திய அளவிலான பயிற்சி மையங்கள் மட்டுமல்லாது, பணித்தள அளவிலும் சபை சார்ந்த பயிற்சி மையங்களை ஏற்படுத்தி வேதாகம சத்தியங்களைக் கற்றுக்கொடுக்கும் ஊழியத்தை முன்னெடுத்து வருகிறோம். இவ்வூழியங்களைத் தேவன் ஆசீர்வதிக்க ஊக்கமாய் ஜெபிப்போம்.

ஜெபியுங்கள்:

**1. தலைமைத்துவ பயிற்சி மையம் (LTI - Leadership Training Institute)**

பிராந்திய அளவிலான தலைமைத்துவ பயிற்சி மையங்களில் சுதேச ஊழியர்கள் மற்றும் சுதேச போதகர்களுக்கான திட்டமிடப்பட்ட முறையான பயிற்சிகள் நடைபெற ஜெபிப்போம்.

தலைமைத்துவ பயிற்சி மையங்களுக்கு பொருத்தமான பயிற்சியாளர்கள் நியமிக்கப்படவும், பயிற்சிக்கான நிதித் தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபிப்போம்.

திருச்சபை மூப்பர்களுக்கென்று நடைபெறும் பயிற்சிக் கூடுகைகளில் சபை மூப்பர்கள் வாஞ்சையோடு கலந்துகொள்ள ஜெபிப்போம்.

விடுமுறை வேதாகம பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர்களுக்கு நடைபெறும் பயிற்சிகளில் அநேகர் பங்குபெற்று ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

தன்னார்வ ஊழியர்கள், சிறு குழுத் தலைவர்கள், வேதாகம குழுத் தலைவர்கள் போன்றவர்களுக்கு முறையான பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

முதியோர் கல்வித்திட்ட ஊழியங்கள், பள்ளி ஆசிரியர்கள், சிறுவர் விடுதி பணியாளர்கள் போன்றவர்களுக்கு முறையான வேதாகம மற்றும் பணித் திறன் பயிற்சிகள் நடைபெற ஜெபிப்போம்.

அனைத்துப் பிராந்தியங்களிலும் தலைமைத்துவப் பயிற்சி மையம் துவங்கப்படவும், பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு, பல்வேறு பயிற்சிகளின் மூலம் உள்ளூர் சபைகள் பலப்படுத்தப்படவும் ஜெபிப்போம்.

**2. வெளிப்புற சுவிசேஷகர் பயிற்சி மையம் (OTC - Outreach Training Centre)**

குஜராத் (நேத்ரங்), ஜார்கண்ட் (கைராபானி) ஆகிய இடங்களில் நடைபெற்று வரும் வெளிப்புற சுவிசேஷங்களுக்கான சிறப்பு பயிற்சி மைய ஊழியங்களைத் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

ஒரு மாத காலப் பயிற்சி, 2 மாத பணித்தள ஊழியம் என தொடர்ந்து 2 வருடம் பயிற்சி பெறும் இளைஞர்கள் மற்றும் இளம் தம்பதியர்கள் இயேசுவுக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்து தேவப்பணி செய்ய ஜெபிப்போம்.

நாம் பணி செய்யும் அனைத்து மாநிலங்களிலும், வெளிப்புற சுவிசேஷ பயிற்சி மையங்கள் (OTC) துவங்கப்பட்டு, ஊழிய எல்லைகள் விரிவடைய ஜெபிப்போம்.

**3. சபை சார்ந்த பயிற்சி மையங்கள் (CBTC - Church Based Training Centre)**

பணித்தள ஆலய வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ள இந்த பயிற்சி மையங்களின் மூலம் ஸ்தல சபைகளிலுள்ள பெண்கள், வாலிபர்கள் மற்றும் அனைத்து விசுவாசிகளும் முறையாக பயிற்றுவிக்கப்பட ஜெபிப்போம்.

பணித்தளங்களிலுள்ள அனைத்து சேகர சபைகளிலும், சபை சார்ந்த பயிற்சி மையங்கள் உருவாக்கப்பட்டு சபைகள் ஸ்திரப்படுத்தப்பட ஜெபிப்போம்.

Dr. Godwin & Dr. Azubha

# உடல் தோற்றக் குறைபாடு

## (Body Dysmorphic Disorder - BDD)



**என்ன?**

உடல் தோற்றக் குறைபாடு (BDD) என்பது ஒருவர் தன்னுடைய உடல் தோற்றத்தில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறைபாடுகள் இருப்பதாக நினைத்துக் கொண்டு மிகுந்த மனக்குழப்பத்துடனும், பதற்றத்துடனும் இருப்பதைக் குறிக்கும் ஒரு மனநிலையாகும். இந்த குறைபாடு பெரும்பாலும் பிறருக்குத் தெரியாதவையாகவோ அல்லது மிகவும் சிறியதாகவோ இருக்கும்.

இது பெரும்பாலும் வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குத் தங்கள் வெளிப்புற அழகில் அதிக அக்கறை கொள்பவராகத் தோன்றினாலும், உண்மையில் BDD என்பது obsessive-compulsive spectrumஇல் வரும் ஒரு மனநல நிலையேயாகும். BDD கொண்டவர்கள் தினமும் பல மணி நேரங்களைக் கண்ணாடி பார்த்தல், அதிகமாக அலங்கரித்தல் போன்ற செயல்களில் செலவிடுவார்கள். இதன் விளைவாக அவர்கள் தங்களை சமூகத்திலிருந்து விலக்கி வைத்துக்கொள்ளவும், வெளியே சொல்ல முடியாத ஆழ்ந்த மனவேதனையோடும் இருப்பார்கள்.

**2026இல் இது ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?**

சமீபத்திய தகவல்கள், இந்தியாவில் சமூக ஊடகப் பயன்பாடு அதிகரிப்பதும் BDD அறிகுறிகள் தீவிரமடைவதும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதைக் காட்டுகின்றன.

"Filter culture" மற்றும் தொடர்ந்து டிஜிட்டல் உலகில் பிறருடன் தங்களை ஒப்பிடும் பழக்கம் அதிகரித்ததன் விளைவாக, "BDD by proxy" (துணைவர் அல்லது குழந்தையின் தோற்றத்தைப் பற்றிய அளவுக்கு மீறிய கவலை) அதிகரித்து வருகிறது. மேலும், மிகச் சிறியதாகத் தோன்றும் உடல் குறைகளைச் சரிசெய்ய இளம் வயதினர்கள் அழகுக்கலை மருத்துவ முறைகளை அதிகமாக நாடுகின்றனர்.

**எப்படி வெளிப்படுகிறது?**

மீண்டும் மீண்டும் செய்யப்படும் செயல்கள்: அடிக்கடி கண்ணாடி பார்த்தல், ஒரே நாளில் பல முறை உடை மாற்றுதல்

மறைத்தல்: அதிக மேக்கப்பைப் பயன்படுத்துதல், முகமூடி, தொப்பி போன்றவற்றைப் பயன்படுத்துதல், குறிப்பிட்ட கோணத்தில் மட்டுமே புகைப்படம் எடுத்தல்

சமூக விலகல்: "நான் அழகாக இல்லை" என்ற எண்ணத்தால், வேலைக்கு செல்லாமல் இருப்பது, பள்ளி / கல்லூரிக்கு செல்வதைத் தவிர்ப்பது, சமூக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் இருப்பது

**உடல் தோற்றக் குறைபாடு மனஅழுத்தத்திற்குச் சிகிச்சை உள்ளதா?**

ஆம், இந்த உணர்வுகளால் போராடும் நபர்களுக்கு, Cognitive Behavioral Therapy (CBT) போன்ற தொழில்முறை மனநல ஆலோசனை சிகிச்சைகள் மிகவும் பயனுள்ள மற்றும் முக்கியமான சிகிச்சை முறையாகக் கருதப்படுகின்றன. இந்தியாவில் பல மனநல நிபுணர்களின் மூலம் இந்த சிகிச்சைகள் பரவலாகக் கிடைக்கின்றன.

**புள்ளிவிவரங்கள்:**

1. 2026ஆம் ஆண்டு குஜராத்தின் வடோதரா போன்ற நகர்ப்புற பகுதிகளில் 18-25 வயதுடைய இளைஞர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், BDD காணப்படும் விகிதம் சுமார் 10% என கண்டறியப்பட்டது.
2. மும்பை நகர்ப்புற மருத்துவ மாணவர்களில் 30.7% பேர் BDD அறிகுறிகளுக்கான பரிசோதனையில் நேர்மறையாக இருந்தனர்.
3. இந்தியாவின் பொதுமக்கள் மத்தியில் BDD காணப்படும் அளவு உலகளாவிய மதிப்பீட்டான 2%-2.4% அளவையே பெற்றுள்ளதாக கருதப்படுகிறது.
4. ஆண்கள் பெரும்பாலும் தசை அமைப்பு (muscle dysmorphia), உயரம் மற்றும் முடி உதிர்தலைக் குறித்து அதிகம் கவலைப்படுகின்றனர். பெண்கள் பெரும்பாலும் தோலின் அமைப்பு, மூக்கின் வடிவம் மற்றும் உடல் எடை குறித்து அதிகம் கவலைப்படுகின்றனர்.
5. மனநல பிரச்சினைகள் குறித்து பேசுவதிலான தயக்கம், மற்றவர்களின் கருத்துகளைக் குறித்த அச்சம் காரணமாக, BDD பெரும்பாலும் சரியாக கண்டறியப்படாமல் போகிறது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

**ஜெபிக்க வேண்டியவை:**

✦ பாதிக்கப்பட்டவர்கள் தங்களைப் பற்றிய தவறான எண்ணங்களிலிருந்து விடுபட்டு, குறைபாடுகளோடு தங்களைப் பார்க்காமல் நிறைவோடு தங்களைக் காண ஜெபிப்போம்.

✦ தங்களின் குறைபாடுகளை மறந்து இயல்பான மனிதத் தன்மையை ஏற்றுக்கொள்ளும் மனதை கர்த்தர் கொடுக்க ஜெபிப்போம்.

✦ சிலர் கூறின வார்த்தைகள், ஒப்பீடுகள் அல்லது மனக்காயங்கள் அவர்கள் தங்களைப் பார்ப்பதற்கு காரணமாக இருந்தால், அதிலிருந்து முழுமையாக விடுதலைப் பெற ஜெபிப்போம்.

✦ அடிக்கடி கண்ணாடிப் பார்த்தல், அதிக அலங்காரம் செய்தல் போன்ற செயல்களை எதிர்க்கொள்ளும் வலிமையை கர்த்தர் கொடுக்க ஜெபிப்போம்.

✦ பிறர் என்ன நினைப்பார்கள் என்ற பயமின்றி சமூக சூழல்களில் கலந்து கொள்ளும் தைரியத்தையும், பாதிக்கப்பட்ட நட்புகள் மீண்டும் புதுப்பிக்கப்படவும் ஜெபிப்போம்.

✦ அழகைக் குறித்து அல்லாமல், உடல் என்ன செய்கிறது - சுவாசிப்பது, நகர்வது, உணர்வது மற்றும் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருப்பது போன்றவற்றில் கவனம் செலுத்த ஜெபிப்போம்.

# விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்

## அருட்திரு. K. B. ஜெயகுமார்



**கேள்வி: அண்ணன் உங்களைக் குறித்த விபரத்தைக் கூறுங்கள்?**

**அருட்பணியாளரின் அறிமுகம்:** நான் சிறு வயதிலிருந்தே கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டேன். தினமும் ஆலய ஆராதனையில் பங்குபெறுவது, ஞாயிற்றுக்கிழமைகளில் வேத வசனங்களைப் படித்து மனப்பாடம் செய்து கூறுவது, ஞாயிறு பள்ளி வகுப்பில் பங்குபெறுவது போன்றவை கிரமமாக செய்து வந்தேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்போது ஏற்பட்டது?**

**அருட்பணியாளரின் பதில்:** 1965ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலமாக பண்ணைவிளையில் (அறைகூவல் கூடுகையில்) கிதியோனியர் முகாம் நடைபெற்றது. அதில் என் தாயார் மற்றும் சகோதர, சகோதரியுடன் பங்கு பெற்றேன். அப்போது நான் 7ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அங்குள்ள பண்ணைவிளையின் குளக்கரையில் நடந்த மாலை சந்தியா கூடுகையில் திரு. P. சாமுவேல் அண்ணன் கொடுத்த செய்தியின் மூலம் முதலாவது இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டேன்.

**கேள்வி: FMPBயில் மிஷனெரியாக எப்படி இணைந்தீர்கள்?**

**அருட்பணியாளரின் பதில்:** இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற எனது வாழ்வில் மகிழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும், சரியான ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்படத்தக்க தொடர்புகள் இல்லாததால், நான் சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்தேனே தவிர, ஆவிக்குரிய வளர்ச்சி ஏற்படவில்லை. ஆயினும், ஆண்டுதோறும் நடைபெறும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அறைகூவல் கூடுகையில் பங்குபெற்று வந்தேன். 1976ஆம் ஆண்டு மீண்டும் என் ஆவிக்குரிய வாழ்க்கையைப் புதுப்பித்துக்கொண்டேன். 1977 ஜூலை 17ஆம் தேதி பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றேன். கர்த்தர், ஏசாயா தீர்க்கதரிசியின் தரிசனம் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று என்னுடன் பேசி ஊழியத்திற்கு அழைத்தார். கர்த்தருடைய பெரிதான கிருபையால் 1978ஆம் ஆண்டு FMPBயில் மிஷனெரியாக இணைந்தேன்.

**கேள்வி: கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்திப் பணி செய்ய வேண்டும் என்ற தாகம் எப்படி ஏற்பட்டது?**

**அருட்பணியாளரின் பதில்:** வட இந்தியாவிற்குச் சென்று ஊழியம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அறைகூவல் கூட்டங்களில் பங்கு பெற்று வந்ததாலும், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்கள் திரு. சைமன் ராபர்ட், திரு. ஞான சிகாமணி ஆகியோர் எங்கள் ஆலய உறுப்பினர்களாக இருந்தபடியால் ஏற்பட்ட தொடர்பினாலும், தினமும் அறைகூவல் பத்திரிக்கையை வைத்து ஜெபித்து வந்ததாலும் தமிழகத்தைவிட்டு மற்ற மாநிலங்களில் ஊழியம் செய்ய வேண்டும் என்று எண்ணம் ஏற்பட்டது.

**கேள்வி: ஊழியத்திற்கு வந்த பிறகு களத்தில் நீங்கள் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** அனுதினமும் ஆலய ஆராதனையில் பங்கு பெற்ற நான் வடபீஹாரில் உயர் வகுப்பினர் பிராந்தியத்தில் பணியாளராக நியமிக்கப்பட்டபோது பல வசதிகளை இழந்தேன். அங்கு கிறிஸ்தவ ஆலயம் கிடையாது. ஆதலால் கிறிஸ்தவர்களின் தொடர்பு கிடையாது. ஞாயிற்றுக்கிழமைகளில் நானும், என் உடன் ஊழியர் குடும்பம் மட்டுமே ஆராதனை செய்வோம். அங்குள்ள மக்கள் கணவனும், மனைவியுமாக இணைந்து செல்ல மாட்டார்கள். இங்கு மருத்துவ வசதி, மின்சார வசதி மற்றும் போக்குவரத்து வசதி மிகவும் குறைவு. தமிழகம் போன்ற வளர்ச்சி பெற்ற மாநிலத்திலிருந்து வளர்ச்சி குறைந்த மாநிலத்திற்கு சென்று ஊழியம் செய்யும்போது, அநேக வசதிகளை விட்டுவிட்டு செல்ல வேண்டியதாயிருந்தது. பிந்தைய நாட்களில் இந்த வாழ்க்கை முறை பழகிவிட்டது.

பிறகு, தென்பீஹாரில் ஆதிவாசி மக்களான மால்டோ மக்கள் மத்தியில் ஊழியம் செய்தோம். மால்டோ மக்கள் மற்ற ஜாதி மக்களுக்கும், பிசாசுகளின் ஆவிகளுக்கும் பயந்தவர்களாயிருந்தனர். இவர்களுக்கு சரியான வஸ்திரமும், ஆகாரமும் கிடையாது. மலேரியா, வயிற்றுப்போக்கு போன்ற வியாதிகள் இங்கு பரவலாக காணப்பட்டது. மால்டோ மக்கள் கிராமங்களுக்கு செல்ல காட்டுப்பகுதியில் ஒத்தையடி பாதையே உள்ளது. தண்ணீர் வசதி கிடையாது. படிக்க பள்ளி வசதியும் கிடையாது. எனவே மூட பழக்கத்தில் மக்கள் வியாதிகள் வரும்போது, மந்திரவாதிகளிடம் சென்று பலி செலுத்தினர். நாங்கள் மிஷனெரியாக அவர்கள் மத்தியில் சென்றபோது, அவர்களில் ஒருவனாக வாழ்வது மிகவும் கடினமாயிருந்தது.

**கேள்வி: ஊழியத்தின் பாதையில் தேவன் தந்த தரிசனம் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** மால்டோ மக்கள், ஆண்டவரைத் தங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டால், எத்தனை சீரும், சிறப்புமாக வாழ முடியும் என்ற எண்ணம் ஏற்பட்டதால், அவர்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்திட வேண்டும் என்ற வைராக்கியம் ஏற்பட்டது.

**கேள்வி: தரிசனத்தை நிறைவேற்ற நீங்கள் கொடுத்த விலைக்கிரயம் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** மக்கள் எங்களைப் புரிந்து கொள்வதில் சிறிது காலம் எடுத்துக் கொண்டாலும், அவர்கள் நலனுக்காகவே ஊழியம் செய்கிறோம் என்று அவர்களைப் புரிந்துக்கொள்ள செய்வது கடினமான காரியமாயிருந்தது. மால்டோ மக்களைப் போல நாங்களும் மலேரியா வியாதியால் பாதிக்கப்பட்டோம். மேலும் இங்கு விஷப் பூச்சிகளும், பாம்புகளும் அதிகமாக காணப்பட்டது. எங்களுடன் பணி செய்த சில ஊழியர்கள் வியாதியினால் மரித்தார்கள். தேவன் அவரது கிருபையால் எங்கள் குடும்பத்தை வியாதிகளிலிருந்து விலக்கிப் பாதுகாத்தார். எங்களது குடும்பத்தின் பிள்ளைகள் நல்ல கல்வி கற்பதற்காக பீஹாரிலிருந்து (இன்றைய ஜார்கண்ட்) தமிழகத்திற்கு அனுப்ப வேண்டியதாயிருந்தது. ஆண்டிற்கு ஒரு முறை மட்டுமே எங்களுடன் தங்குவார்கள்.

**கேள்வி: விலைக்கிரயம் செலுத்தினதால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** மால்டோ மக்களுக்குத் தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அற்புதமான சுகத்தையும், பயத்திலிருந்து விடுதலையும் கொடுத்தபோது, கிராமம் கிராமமாக மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். கிராம மக்கள் கிராமத்தை சுத்தம் செய்து, அவர்களும் குளித்து, சுத்தமான வஸ்திரம் தரித்து ஞாயிறு ஆராதனையில் வாயைத் திறந்து சத்தமாக ஆண்டவரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்ததோடு, கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகைகளையும் கொண்டாட ஆரம்பித்தனர். 60க்கும் மேற்பட்ட கிராமங்கள் எங்கள் ஊழியத்தின் மூலம் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஆராதிக்க ஆரம்பித்தனர். ஒவ்வொரு கிராமமும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, புது சிருஷ்டியாக மாறுவதைக் காணும் போது, எங்களுக்கு ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்றதுபோன்ற மகிழ்ச்சி உண்டாகிறது.

**கேள்வி: கேரீத் வாசகர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** FMPB ஊழியத்தில் 41 வருடம் பணி செய்தபின் 65ஆம் வயதில் இருந்து ஓய்வு பெற்று 8 ஆண்டுகள் ஆகிவிட்டன. எங்கள் வாழ்க்கையில் கர்த்தருடைய அழைப்பைப் பெற்று, அவருக்காக செலவழித்தோம் என்ற மனமகிழ்ச்சி உள்ளது. சிறுவயதில் அல்லது உங்கள் இளமையான காலத்தில் ஜாக்கிரதையாய்க் கர்த்தருடைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை முழு நேர ஊழியத்திற்கு அழைத்தால் தயக்கமில்லாமல் அவருடைய பணியைச்செய்ய முன் வாருங்கள். கர்த்தர் உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பாராக.

**ஜெபக்குறிப்புகள்:**

- மால்டோ மக்களினங்களைப்போன்று நம் இந்தியாவில் கர்த்தரை அறியாத மக்களினங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட
- வாலிபர்கள் இம்மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய தங்களை அர்ப்பணித்து செல்ல ஜெபிப்போம்.

Mrs. Jeba Saral



# DIGITAL ABUSE

*Hi தம்பி தங்கச்சி, இந்த மாதம் நாம் " டிஜிட்டல் அப்யூஸ்' (Digital Abuse) என்ற தலைப்பில் ஜெபிக்க உள்ளோம். டிஜிட்டல் அப்யூஸ் என்பது தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் வாலிபர்களை, இளம் வாலிபர்களை மற்றும் பெண்களை குறி வைத்து நடத்தப்படும் ஆன்லைன் தாக்குதல் ஆகும். தகாத வார்த்தைகள், புகைப்படங்களை எதிர்ப்பாலினருக்கு அனுப்பி அவர்களை மனமடிவாக்குவது; அவர்களைப் பற்றியதான தவறான தகவல்களையும், மறுவடிவமைக்கப்பட்ட புகைப்படங்களைச் சமூக வலைதளங்களிலும், அவர்களது நண்பர்கள் மத்தியிலும் அனுப்புவது போன்றவைகளும் இவற்றுள் அடங்கும். சிலர் தவறுதலாக காதல் வலைகளில், டிஜிட்டல் bullying செய்பவர்களிடம் சிக்குகின்றனர். இவர்கள் இவ்வாறு சிக்கியவர்களின் மொபைலை அடிக்கடி சோதித்து, அவர்களது மெசேஜ் மற்றும் அழைப்பு வரலாற்றைப் பார்ப்பது, அனுமதி இல்லாமல் அவர்களது பெயரில் போலி profile page உருவாக்குவது, அவர்கள் யாருடன் நண்பராக இருக்கலாம் அல்லது இருக்கக் கூடாது; சமூக ஊடகங்களில் எந்த பதிவுகளுக்கு லைக் செய்யலாம் அல்லது செய்யக்கூடாது என எல்லா காரியங்களிலும் இவர்களைக் கட்டுப்படுத்த ஆரம்பித்து விடுகின்றனர். மேலும் whatsapp callஇல் ஆபாச வீடியோக்கள்; அவற்றின் மூலம் பணம் பறித்தல் போன்றவையும் நம் தேசத்தில் பரவலாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இதில் பலர் சிக்கி தங்கள் உயிரையும் மாய்த்துக்கொள்கின்றனர். இதனால் நம் தேசத்தில், கடந்த மாதம், இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயானவர் இவ்வகை பணம் பறிக்கும் கும்பல்களின் கொடுமையினால், அதனை வெளியே சொல்ல பயப்பட்டு, அந்த இரண்டு குழந்தைகளையும் அனாதையாக விட்டுவிட்டு, தன் உயிரையே மாய்த்துக்கொண்டார். படிக்கவே கொடுமையாக இருக்கிறதல்லவா???*

*இதை வாசிக்கிற தம்பி தங்கச்சி, இவ்வகைக் காரியங்களுக்கு நீ அடிமையாக இருக்கலாம்!! அல்லது உன்னுடைய நண்பர்கள் அடிமைகளாக மாட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் இது ஒருபோதும் ஒரு முடிவு அல்ல!! உன் பக்கம் "யேகோவா நிசியாக" உன் தேவன் இருக்கிறார். இது போன்ற அடிமைத்தனத்திலிருந்து உன்னையும், உன் நண்பர்களையும் விடுவிக்க அவர் வல்லவராயிருக்கிறார். அதனால் விசுவாசத்தோடு கீழ்கண்ட ஜெபக்குறிப்புகளை மனதில் கொண்டு, மன்றாடி ஜெபிக்க ஆயத்தப்படு.*

## ஜெபக்குறிப்புகள்:

- *Instagram, ஃபேஸ்புக், வாட்ஸ் அப் போன்றவற்றில் ஆன்லைன் நண்பர்களின் மாய வலையில் சிக்கித் தவிக்கும் வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களுக்காக ஜெபிப்போம்.*
- *தங்கள் பெற்றோர்களுக்குத் தெரியாமல் சக நண்பர்களோடு சவகாசம் வைத்ததினால் டிஜிட்டல் தாக்குதலுக்கு உட்பட்டு வெளியே சொல்ல முடியாமல் பயந்து கொண்டிருக்கும் வாலிபர்களுக்காக ஜெபிப்போம்.*
- *தங்களைக் குறித்ததான பலவிதமான பொய்யான தகவல்களால் சோர்வுற்று, மனமுடைந்து, தற்கொலை எண்ணத்திற்கு உட்பட்டிருக்கும் வாலிபர்களுக்காய் ஜெபிப்போம்.*
- *விழிப்புணர்வோடு சமூக வலைதளங்களை உபயோகப்படுத்த, தேவன் ஞானத்தின் ஆவியை கொடுக்க ஜெபிப்போம்.*
- *"விளையாட்டு வினையாகி விடும்" என்பதை உணர்ந்து வாலிபர்கள் தங்கள் சக மாணவ மாணவியருக்கு ஆன்லைன் தொல்லைகள் கொடுக்காத வண்ணம் அவர்களை ஆண்டவர் மாற்ற ஜெபிப்போம்.*
- *நம் இந்தியாவில், நான்கில் ஓர் இளம் வாலிபர், எதிர்பாலினத்தவரோடான உறவுகளால், ஆன்லைன் Bullyingக்கு உள்ளாகின்றனர். இவ்வாறு இளம் வாலிபர்களை targetஆகக் கொண்டு நடைபெறும் இந்த digital abuse நம் தேசத்தில் மறைய ஜெபிப்போம்.*
- *இந்திய மாணவர்கள் U.S, U K போன்ற தேசங்களுக்குச் சென்று, அங்கிருக்கும் மாணவ மாணவியரை Digital Abuse செய்கின்றனர்; இவர்களின் மனந்திரும்புதலுக்காக ஜெபிப்போம்.*
- *Deepfake மற்றும் morphing போன்றவற்றால் பெண்களை ஆன்லைன் கைதிகளாக்கி, அவர்களைத் தவறாக பயன்படுத்தும் கும்பல்களைத் தேவன் முறியடிக்க ஜெபிப்போம்.*
- *வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை நன்றாக கவனிக்கவும், இது போன்ற காரியங்களில் அவர்கள் சிக்கும்போது அவர்களை இனம் கண்டு கொண்டு, அவர்களோடு துணை நிற்கவும், அவற்றிலிருந்து விடுதலை பெற உதவவும் தேவன் அனைத்து பெற்றோர்களையும் வழிநடத்த ஜெபிப்போம்.*
- *இந்த டிஜிட்டல் abuseஐசை அதிகம் செய்யும் LGBTQ பாலினத்தவர்கள், ஆன்லைன் scammers மற்றும் காதல் தோல்வியால் பாதிக்கப்பட்டவர்கள் இயேசுவின் அன்பை அறிந்து இரட்சிக்கப்பட மன்றாடி ஜெபிப்போம்.*

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

# வார்லி மொழி






Mrs. Jane

இந்தப் பத்திரிக்கையின் மூலமாக ஒவ்வொரு மாதமும் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாதம் வார்லி மொழிபெயர்ப்புப் பற்றியும், சபை வளர்ச்சியில் வார்லி மொழியில் வேதாகமம் பற்றியும் சற்று ஆராய்வோம்!.

### வார்லி ஊழிய அறிமுகம்:

வார்லி பழங்குடியினர் மேற்கு இந்தியாவின் மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தாத்ரா நகர் ஹவேலி, தாமன் ஆகிய பகுதிகளில் உள்ள மலைகள் மற்றும் கடற்கரை ஓரங்களில் வாழும் ஒரு பூர்வகுடி மக்கள் ஆவர். சுமார் 15 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இவர்கள் பேசும் மொழியானது டாவரி, நிஹிரி மற்றும் டோக்ரி என மூன்று முக்கிய கிளைமொழிகளைக் கொண்டுள்ளது.

### FMPB ஊழியம்:

1977ஆம் ஆண்டு குஜராத்தில் அருட்திரு. பால்ராஜ் அவர்களால் ஊழியம் தொடங்கப்பட்டது. பின்னர் மகாராஷ்டிரா மற்றும் தாத்ரா நாகர் ஹவேலி, தாமன் பகுதிகளில் மற்ற மிஷனெரிகளால் தொடரப்பட்டது. தற்போது வார்லி மக்கள் மத்தியில் 14 பணித்தளங்கள் மிகவும் வீரியமாகச் செயல்பட்டு வருகின்றன.

### தற்போதைய உள்கட்டமைப்பு புள்ளிவிவரங்கள்:

முதலில் 90,000க்கும் அதிகமான விசுவாசிகள் இருந்த நிலையில், 188 சபைகள் மற்றும் 54 சுதேஷ ஊழியர்கள் வட இந்திய திருச்சபையிடம் (CNI) ஒப்படைக்கப்பட்டனர். அதன் பிறகு தற்போது 57,224 விசுவாசிகள் நம்முடன் உள்ளனர்; மேலும் 140 பக்கா திருச்சபைகள் மற்றும் 24 கட்சா திருச்சபைகள் என மொத்தம் 164 திருச்சபைகளும், 34 வீட்டு ஆராதனைக் குழுக்களும், 115 சுதேஷ ஊழியர்களும் இருக்கின்றனர்.

### வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியம்:

அருள்திரு. டாக்டர் ஜி. ஆபிரகாம் மற்றும் திருமதி. ஹேமா ஆபிரகாம் அவர்களால் 1998இல் கேட்பா கிராமத்தில் இந்த ஊழியம் தொடங்கப்பட்டது. இதற்கு முன்பாக பிப்பல்வாடா, வகைய் மற்றும் கெர்காம் பகுதிகளில் பணியாற்றிய இவர்கள், கான்வேலில் தங்கி மொழிபெயர்ப்புப் பணியோடு 23 புதிய சபைகளையும் உருவாக்கினர்.

### ஊழியத்தின் முக்கிய சாதனைகள்:

மொழிபெயர்ப்பின் அடிப்படைப் பணிகளான ஒலியியல் மற்றும் அகராதி உருவாக்கப்பட்டதுடன், புதிய ஏற்பாடு குஜராத்தி எழுத்துருவில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 513 பாடல்கள் கொண்ட பாடல் புத்தகங்கள் மற்றும் "Jesus Loves the Varlis" யூடியூப் சேனல் போன்ற தளங்கள் வழியாகவும், 1,024 உறுப்பினர்களைக் கொண்ட "Fruit of Harvest" வாட்ஸ்அப் குழு மூலமாகவும் தினசரி வேத வசனங்கள் மக்களைச் சென்றடைகின்றன.

### ஜெபக் குறிப்புகள்:

- ♣ முழு வேத மொழிபெயர்ப்புப் பணியையும் 2028ஆம் ஆண்டிற்குள் முடிக்கவும், குறிப்பாக ஏசாயா, எரேமியா மற்றும் எசேக்கியேல் போன்ற பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மொழிபெயர்க்கப்படவும் ஜெபிப்போம்.
- ♣ சங்கீதம் மற்றும் நீதிமொழிகள் அடங்கிய புதிய ஏற்பாடு தயாரிப்புப் பணிகளுக்காகவும், உதவிப் பணியாளர்களின் ஒத்துழைப்பிற்காகவும், அவர்களின் சுகத்திற்காகவும் தொடர்ந்து ஜெபிப்போம்.

### சிந்திப்பீர்:

ஒரு தனிநபரின் கீழ்ப்படிதலை ஆசீர்வதித்து குஜராத் மற்றும் மகாராஷ்டிரா இரு மாநிலங்களிலும் வார்லி மொழியில் அவர்கள் மூலமாய் வேதாகமத்தை மொழிபெயர்த்து தந்த தேவன் உங்களைக் கொண்டும் அசாதாரணமான காரியங்களைச் செய்ய முடியும். அவர் சித்தம் செய்ய நம்மை அர்ப்பணிப்போமா?



Ms. Wiselin

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...







## FROM JOKES TO REVOLT

- CJP என்ற பிரம்மாண்டமான எழுச்சி, ஒரு பலவீனமான எதிர்க்கட்சி எவ்வாறு விரக்தியடைந்த GenZ, வேலைவாய்ப்பு போன்ற முறைசார்ந்த பிரச்சினைகளுக்கு எதிராக அரசியல் satire மூலம் போராடத் தூண்டியது என்பதை வெளிப்படுத்துகிறது.
- சுமைகளைச் சுமந்து கொண்டு, மாற்றத்திற்காகக் கண்ணீர் சிந்திப் போராடும் இளைஞர்களுக்கு பதில்களும், நம்பிக்கையும் கிடைக்க ஜெபிப்போம்.

## AI DRONE PERIL

- மலிவான AI தொழில்நுட்பத்தில் இயங்கும் drones வளர்ச்சி, கிளர்ச்சிக் குழுக்களுக்கு அதிக வலிமையைக் கொடுத்து, பல பகுதிகளைக் குறைந்த செலவிலான, முடிவே இல்லாத 'நிரந்தரப் போர்களில்' தள்ளிவிடுகிறது. மனிதக் கண்காணிப்பு இல்லாமல், இலக்குகளைத் தாக்கி அழிக்கும் அதிகாரம் இந்தத் தன்னாட்சி ஆயுதங்களுக்கு (autonomous weapons) வழங்கப்படுவதால், பெருமளவிலான உயிரிழப்புகள் ஏற்படுவதற்கான ஆபத்து மிகக் கடுமையாக அதிகரிக்கிறது.
- நெறிமுறை இல்லாத இந்த அல்காரிதம் போர்களில் (algorithmic warfare) இருந்து அப்பாவி உயிர்களைப் பாதுகாக்கவும், தன்னாட்சி ஆயுதங்களைக் கட்டுப்படுத்தவும் உலகத் தலைவர்களுக்கு நல்ல புத்தியையும், ஞானத்தையும் கர்த்தர் கொடுக்க ஜெபிப்போம்.





## THE COST OF DOWRY

- நடிகை ட்விஷா சர்மாவின் சந்தேகத்திற்கிடமான மரணம், வரதட்சணைக் கொடுமையால் ஏற்பட்ட மரணம் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் அவருடைய கணவர் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதியான அவருடைய மாமியார் ஆகியோரிடம் நடத்தப்படும் ஒரு உயர்மட்ட விசாரணைக்கு வழிவகுத்துள்ளது.
- வரதட்சணை காரணமாக கடுமையான மன ரீதியான மற்றும் உடல் ரீதியான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு, பெரும்பாலும் தற்கொலைகளாகவோ அல்லது கொலைகளாகவோ மறைக்கப்படும் மரணங்களைச் சந்திக்கும் பெண்களுக்காக ஜெபிப்போம்.

## RUPEE'S SLIDE

- ஏற்றுமதியை விட இறக்குமதி அதிகரிப்பதால் இந்தியாவின் விரிவடைந்து வரும் வர்த்தகப் பற்றாக்குறை, அதன் சேவைத் துறையின் பங்களிப்பை விட அதிகமாக உள்ளது. இது சந்தையில் ரூபாயின் வரத்தை அதிகப்படுத்தி, அமெரிக்க டாலருக்கான தேவையை உயர்த்துகிறது; இதனால் இந்திய ரூபாயின் மதிப்பு இயல்பாகவே வீழ்ச்சியடைகிறது.
- ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வாழ்க்கைக்கான செலவு ஆகிய பொருளாதார நெருக்கடிகளை இந்திய கொள்கை வகுப்பாளர்கள் கையாண்டு வரும் வேளையில், அவர்களுக்குத் தேவையான ஞானமும், தொலைநோக்குப் பார்வையும் கிடைக்க ஜெபிப்போம்.






## HEATWAVES AND PEST BAN

- கடுமையான வெப்பத்தினால் மாம்பழ விளைச்சல் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்திய மாம்பழ ஏற்றுமதியாளர்களுக்கு மற்றுமொரு அடி விழுந்துள்ளது. ஏற்றுமதி மையமொன்றில் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் கிருமிநாசினி சுத்திகரிப்பில் ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக, கடந்த 20 ஆண்டுகளில் முதல்முறையாக இந்தியாவிடமிருந்து புதிய பழங்களை இறக்குமதி செய்வதை ஜப்பான் நிறுத்தியுள்ளது.
- சுட்டெரிக்கும் வெப்பத்திலிருந்து மக்களைக் கர்த்தர் பாதுகாக்கவும், இந்தியாவின் முக்கிய விவசாய வர்த்தகத்தை மீட்டெடுத்து விவசாயிகளைப் பாதுகாக்கவும், ஏற்றுமதி மையத்தின் விதிமுறை இணக்கப் பிரச்சினைகளை (compliance issues) தீர்ப்பதற்கான நல்ல ஞானத்தை கர்த்தர் அதிகாரிகளுக்கு வழங்கவும் ஜெபிப்போம்.

# வைராக்கியமும், சபையில் எழுந்த எதிர்ப்பும்

MR. ISRAEL NATHANIEL EDWARD



கடந்த மாதம், பவுல் தனது உயிரையே அச்சுறுத்திய கடுமையான துன்புறுத்தலை எதிர்கொண்டதை நாம் பார்த்தோம். மேலும் பவுலும், பர்னபாவும் தொடர்ச்சியான துன்புறுத்தல்களைச் சந்தித்தபோதிலும், உள்ளூர் தலைமைத்துவத்தை ஏற்படுத்தி சபைகளை பலப்படுத்தினார்கள் என்பதையும் கண்டோம். இந்த மாதம், யூத மதச்சட்ட ஆசிரியர்கள் (Judaizers) அந்தியோகியா சபையை மோசேயின் நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திற்குள் கொண்டு வர முயன்றபோது, பவுலும், பர்னபாவும் எவ்வாறு தீவிர ஆர்வத்துடன் அந்த முயற்சியை முறியடித்தார்கள் என்பதைப் பார்க்கப்போகிறோம்.

பவுலும், பர்னபாவும் பிசீதியா, பம்பிலியா, பெர்கே மற்றும் அத்தாலியா வழியாக அந்தியோகியாவிற்குத் திரும்பினர் (அப். 14:24-25). இவ்வாறு அவர்கள் பரிசுத்த ஆவியால் கொடுக்கப்பட்டப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றினர். பின்னர் அவர்கள் சபையினரை ஒன்றுகூட்டி, தேவன் தங்கள்மூலம் செய்த அனைத்தையும், யூதரல்லாதவருக்கு விசுவாசத்தின் வாசலைத் திறந்ததையும் அறிவித்தனர் (அப். 14:27). சம்பவங்களால் நிரம்பிய மிஷனெரி பயணத்திற்குப் பிறகு, தங்களுக்காக ஜெபங்களில் ஆதரவு அளித்து அனுப்பிய சபையின் அன்பிலும், ஆறுதலிலும் அவர்கள் மகிழ்ந்தனர். ஆனால் இந்த சமாதான காலம் நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. விரைவில், யூதேயாவிலிருந்து சிலர் வந்து, இரட்சிப்பைப் பெற அனைவரும் விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும் என்ற பொய்யான போதனையைப் பரப்பினர். இந்த எதிர்ப்பு கோட்பாட்டைச் சார்ந்ததாக இருந்தது. மேலும் அதை முன்வைத்தவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக் கூறிக்கொண்டார்கள். பவுலும், பர்னபாவும் உடனடியாக அவர்களை எதிர்த்து, அந்தியோகியாவிலுள்ள விசுவாசிகளைப் பாதுகாக்க முயன்றனர். பவுல் எவ்வாறு சுவிசேஷத்தைப் பாதுகாத்திருக்கக் கூடும் என்பதை அவர் பின்னர் கலாத்தியர், பிலிப்பியர் மற்றும் ரோமர் ஆகியோருக்கு எழுதிய நிருபங்களின் வாயிலாக அறிந்துகொள்ளலாம்.

### பவுல் என்ன போதித்தார்?

- நீதிமானாக்கப்படுவதற்காக விருத்தசேதனத்தை நம்புவது, இயேசுகிறிஸ்து தனது உயிரைத் தியாகம் செய்து பெற்றுத்தந்த கிருபையை வீணாக்குவதாகும் (கலா. 2:21). அவர் கலாத்தியருக்கு, "கிறிஸ்துவால் உங்களுக்கு ஒரு பயனும் இல்லை" என்று எச்சரித்தார் (கலா. 5:2).
- விருத்தசேதனம் என்ற ஒரே கட்டளையை ஏற்றுக்கொள்வது, ஒருவரை "முழு நியாயப்பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டிய கடனாளி" ஆக்குகிறது (கலா. 5:3). ஆனால், மோசேயின் நியாயப்பிரமாணம் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டிய அமைப்பு; அதை எவராலும் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாது.
- புதிய உடன்படிக்கையில், வெளிப்புற இன அல்லது சடங்கு அடையாளங்களுக்கு மதிப்பு இல்லை. "விருத்தசேதனமும் ஒன்றுமில்லை; விருத்தசேதனம் இல்லாமையும் ஒன்றுமில்லை. புதிய சிருஷ்டியே முக்கியம்" (கலா. 6:15).
- ஆபிரகாமின் விசுவாசம், அவர் விருத்தசேதனம் செய்யப்படுவதற்கு முன்பே இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, வாக்குத்தத்தமும் நீதிமானாக்கப்படுதலும் விசுவாசத்தினாலேயே வருகிறது. விருத்தசேதனம் பின்னர் வந்த அடையாளம் மட்டுமே, நீதியின் மூல காரணம் அல்ல என்பதை பவுல் நிறுவினார் (ரோமர் 4:9-11).
- உண்மையான விருத்தசேதனம் என்பது உடலில் உள்ள அடையாளமல்ல. அது தேவனுடைய ஆவியினால் ஆராதித்தல், கிறிஸ்துவுக்குள் மேன்மைபாராட்டுதல், மனித சாதனைகளிலும் சடங்குகளிலும் நம்பிக்கை வைக்காத நிலை என்னும் ஆவிக்குரிய நிலையாகும். "நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று பவுல் கூறினார் (பிலி. 3:3).

அந்தியோகியா சபை வெறும் வாய்மொழி எதிர்ப்பில் மட்டும் நிற்கவில்லை. நிலையான தீர்வை நாடி, அவர்கள் பவுலையும் பர்னபாவையும் மற்ற சிலரையும் இந்த விவகாரத்தைப் பற்றி எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களையும், மூப்பர்களையும் சந்திக்க அனுப்பினர். அங்கு பவுலும் பர்னபாவும் யூதரல்லாதவரிடையே தேவன் செய்த காரியங்களை அறிவித்தனர். அப்போதும், "பரிசேயர் பிரிவைச் சேர்ந்தவர்கள்" என்று அழைக்கப்பட்ட விசுவாசிகள் கூட்டத்திலிருந்து எழுந்து எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்கள் முன்பு பேதுருவுக்கு எதிராகக் காட்டிய பரிசேயரின் குறுகிய மனப்பான்மையையே இன்னும் வைத்திருந்தனர் (அப். 11:2). அவர்கள் சமாதானப்படாமல், இப்போது மூப்பர்களிடம் முறையிட்டனர் (அப். 15:2,5).

அப்போஸ்தலர் 15:6இல் இருந்து, இந்தக் கூட்டம் பின்னர் மறுமுறை கூடுவதற்காக ஒத்திவைக்கப்பட்டது என்பதை அறியலாம். இந்த இடைவெளியில், கலாத்தியர் 2:1-10இல் பவுல் குறிப்பிடும் தனிப்பட்ட சந்திப்பு நடைபெற்றது. இது பவுலுக்கு

> உண்மையான இரட்சிப்பின் அடையாளம் புதிய சிருஷ்டியாதலாகும். அது தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலும், இயேசு கிறிஸ்துவின் பரிபூரண நிலையை நோக்கி வளர மனப்பூர்வமாய் முயலுதலுமாகும்.

எருசலேமின் தலைவர்களான பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரைச் சந்திக்கும் வாய்ப்பாக அமைந்தது. புறஜாதியார் மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து சுதந்திரமுள்ளவர்கள் என்ற தனது கருத்தை அவர் அவர்களிடம் ஏற்றுக்கொள்ளச் செய்தார். அதன் விளைவாக, அடுத்த பொதுக் கூட்டம் (அப்போ. 15:6-29) பவுல், பர்னபா, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரின் கருத்துக்களை முழுமனதுடன் அங்கீகரித்தது. இது யூதச் சடங்கு அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்தவத்தைக் காப்பாற்றிய மிகப் பெரிய சாதுரியமான வெற்றியாக அமைந்தது. மூப்பர்கள், புறஜாதியார் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவுகளிலிருந்தும், இரத்தத்திலிருந்தும், நெரித்து கொல்லப்பட்ட மிருகங்களின் இறைச்சியிலிருந்தும், பாலியல் அசுத்தத்திலிருந்தும் விலகியிருக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். மேலும், இதைத் தவிர வேறு எந்த சுமையையும் புறஜாதியார்மேல் சுமத்த வேண்டாம் என்றும் கூறினர் (அப். 15:28-29). அவர்கள் இதை எழுத்து மூலமாக உறுதிப்படுத்தி, யூதாவையும் சீலாவையும் அந்தியோகியா சபைக்கு அனுப்பி விளக்கச் செய்தனர். இது அந்தியோகியாவில் உள்ள விசுவாசிகளுக்கு மிகுந்த சந்தோஷத்தை அளித்தது (அப். 15:30-32).

## இதன் விளைவு என்ன?

அந்தியோகியா சபை யூதர்கள் மத்தியிலும், புறஜாதியார் மத்தியிலும் வேகமாக வளர்ந்தது. கி.பி. 70இல் எருசலேம் அழிக்கப்பட்டபின், அந்தியோகியாவின் செல்வாக்கு அதிகரித்து, கிழக்கு பகுதிகளில் முக்கிய கிறிஸ்தவ மையமாக மாறியது. அந்த சபை பல ஆயர்களையும் போதகர்களையும் உருவாக்கியது. அவர்களில் இக்னேசியஸ் (Ignatius) மிகவும் புகழ்பெற்றவராக ஆனார். கி.பி. 107இல், ரோமாபுரியில் மரணதண்டனைக்காக அழைத்துச் செல்லப்பட்டபோது, அவர் எழுதிய பல கடிதங்கள் ஆரம்பகால கிறிஸ்தவ தத்துவத்திற்கும் சபை அமைப்பிற்கும் அடித்தளமாக அமைந்தன.

## நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

மேலே விவரிக்கப்பட்ட நிகழ்வுகள், எந்த மதச் சடங்குகளாலும் அல்லது மனித சாதனைகளாலும் இரட்சிப்பைப் பெற முடியாது என்பதை தெளிவாகக் காட்டுகின்றன. உண்மையான இரட்சிப்பின் அடையாளம் புதிய சிருஷ்டியாதலாகும். அது தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலும், இயேசு கிறிஸ்துவின் பரிபூரண நிலையை நோக்கி வளர மனப்பூர்வமாய் முயலுதலுமாகும். “ஆவிக்குரியது” என்று கருதப்படும் செயல்களாலோ அல்லது வெறும் வாய்மொழி அறிவிப்புகளாலோ தேவனைக் கவர முயற்சிக்கக் கூடாது. தேவனை ஏமாற்ற முடியாது; அப்படிச் செய்வதால் நம்மையே ஏமாற்றிக்கொள்வோம் (மத். 7:21-23). பொய்யான போதனைகளுக்கு எதிராக நாம் தீவிரமாக நிற்கும் நிலைப்பாடே சபையின் கட்டுமானத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

## முடிவு:

**இசக்கார் பெயரின் அர்த்தங்கள், தகப்பனின் ஆசீர்வாதக் கூறலில் காணப்பட்ட தெளிவான, பணிவான குணங்கள் மற்றும் தலைவனின் தரிசனத்தில் கூறப்பட்ட மகிழ்ச்சிக்கான ஆதாரம் ஆகியவை இயேசுகிறிஸ்துவின் நல்வாழ்வைப் பிரதிபலிக்கிறது. வார்த்தையாக இருந்து மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்துவின் பிறப்பும், நல்வாழ்வும் நமக்கு உண்மையான மகிழ்ச்சியையும், ஆத்தும திருப்தியையும் கொண்டு வருகிறது என்பதை இசக்கார் கோத்திரம் மூலம் அறிய முடிகிறது.**

**பிரியமானவர்களே! மகிழ்ச்சியான கூடாரம் வேண்டுமெனில், மகிழ்ச்சிக்கான ஆதாரம் தேவை. அந்த ஆதாரம் கிறிஸ்துவே. இசக்காரின் வாழ்வு இயேசுகிறிஸ்துவிற்கு இடங்கொடுத்து வாழும் உண்மை கிறிஸ்தவனின் சிந்தையைப் பிரதிபலிக்கின்றது. காலங்களை உணர்ந்து செயல்பட்ட அவர்கள் தங்கள் கூடாரங்களை “மகிழ்ச்சியின் கூடாரங்களாக” அனுபவித்தார்கள். உண்மை மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள நீ விரும்புகிறாயா? இயேசுவை இருதயத்தில் நிலைநிறுத்துவோம்! மகிழ்ச்சியான வாழ்வைப் பெற்றுக்கொள்வோம்!**

**“நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.” (சங்கீதம் 90:12)**



# எது உன் தெரிந்தெடுப்பு?

## HANDLE WITH CARE

## RIGHT FOUNDATION

BUILD ON THE



MRS. VASANTHI EMMANUEL

அரவிந்துக்கு அதே வாரத்தில் இரண்டு முக்கியமான உரையாடல்கள் நடந்தன. இரண்டிலும் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முதல் உரையாடல் அவரது தொழில் குறித்து இருந்தது. பெங்களூரில் உள்ள ஒரு முன்னணி நிறுவனம் அதிக சம்பளம், விரைவான முன்னேற்றம் கொண்ட ஒரு வேலை வாய்ப்பு. அவனது குடும்பம் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, இது தேவனின் சித்தமாகக் கண்டது. இரண்டாவது உரையாடல் திருமணத்தைப் பற்றியது. உறவினர்கள் மூலம் ஒரு திருமண வரன் வந்தது. அந்தப் பெண் நன்கு கல்வி கற்றவள். நல்ல நிலையில் இருந்தவள். வெளிப்படையாகப் பார்த்தால் எல்லாம் சிறப்பாகவே தோன்றியது. ஆனால் அரவிந்தின் உள்ளத்தில் ஒரு அமைதியின்மை இருந்தது. அந்த வேலை மெதுவாக தன்னைத் தேவனோடுள்ள உறவிலிருந்து விலக்கிவிடும் போலத் தோன்றியது. அதேபோல் அந்தத் திருமண காரியங்களிலும் ஆவிக்குரிய ஆழமான ஒருமைப்பாடு இல்லை என்பதை அவன் உணர்ந்தான். ஏதோ ஒன்று தனக்கு ஒத்துப் போகவில்லை என்ற உணர்வு அவனுக்குள் இருந்தது.

அந்த வாரத்தில் அரவிந்த் தனது மனதில் ஒரு எளிய ஆனால் நேர்மையான கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தான். கர்த்தாவே உண்மையில் முக்கியமானது எது? சம்பளமா, பதவியா, வெளிப்படையான தோற்றமா. ஆனால் வேதத்தில் இயேசு கற்றுத் தந்ததை அவன் மறந்து விடவில்லை. இயேசு ஒரு மனிதனைப் பற்றி மத். 13:44இல் கூறுகிறார். அவன் மறைந்திருந்த ஒரு பொக்கிஷத்தைக் கண்டுபிடித்து, அதை அடைய மகிழ்ச்சியுடன் தன்னிடமிருந்த அனைத்தையும் விட்டுக் கொடுக்கிறான். ஒரு வியாபாரி மிக உயர்ந்த மதிப்புள்ள ஒன்றைப் பெற தன்னிடமிருந்த அனைத்தையும் விட்டு விடுகிறான் (மத். 13:45, 46).

அந்த மனிதர்கள் யாராலும் கட்டாயப்படுத்தப்படவில்லை. அவர்கள் தாமாகவே அனைத்தையும் விட்டுக் கொடுத்தார்கள். ஏனெனில் அவர்கள் கண்டுபிடித்ததின் உண்மையான மதிப்பைப் புரிந்து கொண்டிருந்தார்கள். அதேபோல் ஒவ்வொரு இளம் விசுவாசியும் தாங்கள் எதை மிகுந்த மதிப்புடன் கருதுகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நல்ல வேலை வாய்ப்பையோ அல்லது வாழ்க்கைத் துணையையோ விரும்புவது தவறு அல்ல. ஆனால் ஆவிக்குரிய வாழ்வில் ஒன்றித்த கருத்துடன் இல்லாமல் சுகம், பணம் அல்லது வெளிப்புறத் தோற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டும் முடிவெடுப்பதில் தான் ஆபத்து இருக்கிறது.

“முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்” (மத். 6:33) என்று இயேசு நமக்கு நினைப்பூட்டுகிறார். தேவன் முதன்மையான இடத்தில் இல்லாதபோது, மற்ற அனைத்தும் மெதுவாக அவருடைய இடத்தை எடுத்துக்கொள்ள ஆரம்பிக்கிறது. இது குறிப்பாக திருமணத் தேர்வில் மிகவும் முக்கியமானது. திருமணம் என்பது கல்வி, குடும்பப்பின்னணி அல்லது பொருளாதார நிலை பற்றியது மட்டுமல்ல, அது ஒரே திசையில் கிறிஸ்துவை நோக்கி ஒன்றாக நடப்பது. 2 கொரி. 6:14இல் வேதாகமம் தெளிவாக சொல்லுகிறது “அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் இணைக்கப்படாதிருங்கள்” என்று. இரண்டு மனிதர்களுக்கும் ஒரே ஆவிக்குரிய அடித்தளம் இல்லாதபோது அவர்களின் வாழ்க்கைப் பயணம் கடினமாகிவிடுகிறது. ஒருவருக்கு விசுவாசத்தில் வளர வேண்டும் என்ற விருப்பம் இருக்கலாம். ஆனால் மற்றொருவர் அதற்கு அதே மதிப்பைக் கொடுக்காமலிருக்கலாம். காலப்போக்கில் இந்த வேறுபாடு மன அழுத்தம், இடைவெளி மற்றும் குழப்பத்தை உருவாக்கும். இயேசு விளக்குவது போல் வாழ்க்கையின் கவலைகளும், செல்வத்தின் மாயையும் ஆவிக்குரிய வளர்ச்சியை நெரித்து விடக்கூடும். இது வேலைப்பளுவின் மூலம் மட்டுமல்ல. தேவனிடமிருந்து நம்மை விலக்கிச் செல்லும் உறவுகளின் மூலமாகவும் நிகழலாம். ஆரம்பத்தில் நல்ல வாய்ப்பாக தோன்றுவது மெதுவாக ஜெபம், பக்தி மற்றும் சமாதானத்தை வாழ்க்கையிலிருந்து அகற்ற ஆரம்பிக்கலாம். அறியாமலேயே மனிதனின் இருதயம் தேவனை விட்டு மற்ற முன் உரிமைகளின் பக்கம் திரும்பத் தொடங்குகிறது.

*அரவிந்த் இந்த சத்தியத்தைப் புரிந்து கொண்டான். ஜெபத்திலும், தேவபக்தியுள்ளவர்களின் ஆலோசனையையும் நாடிய பிறகு தேவனோடுள்ள தனது உறவை பாதுகாக்கும் பாதையை தெரிந்தெடுத்தான். தனது விசுவாசத்தையும், கிறிஸ்துவுக்கான அர்ப்பணிப்பையும் பகிர்ந்து கொள்ளும் வாழ்க்கைத் துணைக்காக காத்திருக்கவும் அவன் முடிவு செய்தான். அவனது தீர்மானம், பயம் மற்றும் அழுத்தத்தின் அடிப்படையில் அல்ல. உறுதியான நம்பிக்கையின் அடிப்படையில் இருந்தது. “உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்” (நீதி. 3:5-6).*

*இன்றைய பல கிறிஸ்தவ இளைஞர்களுக்கான உண்மையான கேள்வி... என்ன கிடைக்கிறது? என்பதல்ல. எது உண்மையில் மதிப்புடையது? என்பதே. ஒரு வேலை வாய்ப்பிற்கோ அல்லது திருமண காரியங்களுக்கோ ஆம் சொல்லும் முன் இவ்வாறு கேட்பது மிக முக்கியம்.*

- ✦ *இந்த தேர்வு என்னை தேவனிடம் மேலும் நெருக்கமாக கொண்டு செல்லுமா அல்லது மெதுவாக அவரிடமிருந்து விலக்குமா?*
- ✦ *இந்த உறவு என்னை விசுவாசத்தில் பலப்படுத்துமா? அல்லது பலவீனப்படுத்துமா?*
- ✦ *நான் தேவனுடைய வழிநடத்துதலின் அடிப்படையில் தேர்வு செய்கிறேனா? அல்லது வெறும் அழுத்தத்தையும், பயத்தையும் பின்பற்றுகிறேனா?*

*வாழ்க்கையில் பல நல்ல வாய்ப்புகள் கிடைக்கலாம். ஆனால் அவை அனைத்தும் தேவனுடைய சிறந்த திட்டமாக இருக்காது. “பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்” (கொலோ. 3:2). நமது இருதயத்தை நித்தியமானவற்றின் மீது நிலை நிறுத்தும்போது நமது தீர்மானங்களும் மாறத் தொடங்குகின்றன. தேவன் மதிக்கிறவற்றையே நாமும் மதிக்க கற்றுக் கொள்கிறோம்.*

*இறுதியாக நீங்கள் எதைப் பொக்கிஷமாக கருதுகிறீர்களோ அதுதான் உங்கள் வாழ்க்கையை வடிவமைக்கும். வேலைகள் மாறக்கூடும், பணம் வரலாம், போகலாம். ஆனால் கிறிஸ்துவின் மேல் நீங்கள் கட்டும் அடித்தளம் நிலைத்திருக்கும். இயேசு அந்த மனிதன் ஒரு நல்ல வாய்ப்பைக் கண்டான் என்று சொல்லவில்லை. அவன் ஒரு பொக்கிஷத்தைக் கண்டான் என்று சொன்னார். ஆகையால் தற்காலிகமானவற்றை விட நித்தியமானவற்றைத் தேர்வு செய்யுங்கள். கிறிஸ்துவில் வேரூன்றியவை மட்டுமே உண்மையாக நிலைத்திருக்கும்.*

**இதை சற்று யோசியுங்கள்:**

- ✦ *நீங்கள் எதைத் தேர்வு செய்கிறீர்கள்:*
  - ★ *சம்பளம், சுக வசதி மற்றும் எதிர்கால பாதுகாப்பு*
  - ★ *குடும்ப அங்கீகாரம் மற்றும் சமூக எதிர்ப்பார்ப்புகள்*
  - ★ *தனிப்பட்ட மகிழ்ச்சி மற்றும் உணர்ச்சி சார்ந்த இணைப்பு*
  - ★ *தேவனுடைய சித்தமும், ஆவிக்குரிய வளர்ச்சியும்*

## இவற்றில் எது உங்கள் தெரிந்தெடுப்பு?



# திராட்சைத்தோட்டத் தொழிலாளர்கள்

REV. K. KINGSLEY JOHN



மத்தேயு 20:1-16இல் காணப்படும் "திராட்சைத்தோட்டத் தொழிலாளர்கள்" என்ற உவமை, தேவனுடைய இராஜ்யம், கிருபை மற்றும் தேவநீதியைப் பற்றிய இயேசுகிறிஸ்துவின் ஆழமான போதனைகளில் ஒன்றாகும். இந்த உவமையின் மூலம் மனிதர்களின் "நியாயம்" என்ற எண்ணத்தைக் கடந்து, தேவனுடைய கிருபை எவ்வளவு பெரியது என்பதை இயேசு வெளிப்படுத்துகிறார்.

இந்த உவமையில், ஒரு வீட்டுக்காரன் அதிகாலையில் தனது திராட்சைத்தோட்டத்தில் வேலை செய்ய தொழிலாளர்களை அழைக்கிறார். ஒரு நாளுக்கான கூலியாக ஒரு பணத்தைக் கொடுக்க ஒப்புக்கொள்கிறார். பின்னர் அவர் மூன்றாம் மணி, ஆறாம் மணி, ஒன்பதாம் மணி, பதினொன்றாம் மணி ஆகிய நேரங்களிலும் மீண்டும் சென்று மேலும் சிலரை வேலைக்கு அழைக்கிறார். நாள் முடிவில் அனைவருக்கும் ஒரே கூலி வழங்கப்படுகிறது. காலை முதல் உழைத்தவர்கள் இதைக் கண்டு முறையிடுகிறார்கள்; ஏனெனில் அவர்கள் அதிக கூலியை எதிர்பார்த்தனர். ஆனால் வீட்டுக்காரன், "நான் உங்களுக்கு வாக்குக்கொடுத்த கூலியைத்தான் கொடுத்திருக்கிறேன்; எனது சொத்திலே எனக்கு விருப்பமானபடி செய்ய எனக்கு அதிகாரமில்லையா?" என்று கேட்கிறார்.

- *முதலாவதாக,* இந்த உவமை தேவனுடைய கிருபையை எடுத்துக்காட்டுகிறது. மனிதர்கள் சாதனை, உழைப்பு, தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் பலனை எதிர்பார்க்கிறார்கள். ஆனால் தேவனுடைய கிருபை மனித முயற்சியால் சம்பாதிக்கப்படுவது அல்ல. கடைசியில் வந்த தொழிலாளர்களும் அதே கூலியைப் பெற்றது, தேவனுடைய இரக்கம் எல்லோரிடத்திலும் சமமாய் இருப்பதைக் காட்டுகிறது. இரட்சிப்பு என்பது மனித செயல்களின் சம்பளம் அல்ல; அது தேவனுடைய அன்பின் இலவச வரம்.
- *இரண்டாவதாக,* இந்த உவமை தேவனுடைய இராஜ்யத்தில் அனைவரும் சமமானவர்கள் என்பதை உணர்த்துகிறது. சிறு வயதிலிருந்தே தேவனைப் பின்பற்றுகிறவர்களையும், வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் தேவனை அறிகிறவர்களையும் தேவன் ஒரே அன்போடு ஏற்றுக்கொள்கிறார். தேவனுடைய சந்நிதியில் யாரும் பெருமைக் கொள்ள முடியாது; அனைவரும் அவருடைய கிருபையையே சார்ந்திருக்கிறார்கள்.
- *மூன்றாவதாக,* இந்த உவமை பொறாமை மற்றும் ஒப்பீட்டின் ஆபத்தை எச்சரிக்கிறது. அதிக நேரம் உழைத்தவர்கள் தங்களுக்கு குறைவாக கூலி கிடைத்ததால் அல்ல, மற்றவர்களுக்கும் சமமாக கிடைத்ததால் வருந்தினர். மனித இயல்பில் காணப்படும் இந்த மனப்பான்மையை இயேசு சுட்டிக்காட்டுகிறார். மற்றவர்களுக்கு தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்களைப் பார்த்து பொறாமைப்படாமல், அவருடைய நன்மையை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இங்கு சொல்லப்படும் முக்கியமான பாடமாகும்.

திராட்சைத்தோட்டம் தேவனுடைய இராஜ்யத்தைக் குறிக்கிறது; தொழிலாளர்கள் தேவனால் அழைக்கப்படும் மக்களைக் குறிக்கிறது. சிலர் வாழ்க்கையின் ஆரம்பத்தில் தேவனுடைய சேவைக்குள் வருகிறார்கள்; சிலர் பின்னாளில் அழைக்கப்படுகிறார்கள். ஆனால் தேவன் அவரவர் நேரத்தில் அழைத்தவர்களை சமமாக மதிக்கிறார். "முந்தினோர் பிந்தினோராகவும், பிந்தினோர் முந்தினோராகவும் இருப்பார்கள்" என்ற வசனம் இந்த உவமையின் மையச் செய்தியாகும். மனிதர்களின் கணக்குகளைக் காட்டிலும் தேவனுடைய கிருபை உயர்ந்தது என்பதை இது எடுத்துரைக்கிறது.

*முடிவாக:*

"திராட்சைத்தோட்டத் தொழிலாளர்கள்" என்ற உவமை, தேவனுடைய அளவற்ற கிருபை, இரக்கம், சமத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. இந்த உவமை மூலம் கிறிஸ்தவர்கள் பெருமை, பொறாமை, ஒப்பீடு ஆகியவற்றை விட்டு, தேவனுடைய கிருபையில் நம்பிக்கை வைத்து, அவருடைய அழைப்புக்கு உண்மையாய் பதிலளிக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்கிறோம். தேவனுடைய அன்பும் கிருபையும் எல்லோருக்கும் சமமானது என்பதை இந்த உவமை தெளிவாக அறிவிக்கிறது.

வழி நடத்துவாராக! ஆமென்.



# மகா கனம் பொருந்திய தெயோப்பிலு

மகா கனம் பொருந்தியவன்,
மாநேசரின்பால் தீராக் காதல் கொண்டவன்,
தேவ அன்பின் ஆழம் அறிந்திடத் தீவிரம் கொண்டவன்,
தேடும் உள்ளங்களுக்கு நம்பிக்கை நல்கியவன்.

அண்டம் படைத்த ஆண்டவனுக்கு அரிய நண்பன்,
ஆகச் சிறந்த ரோமரின் தலைமை வகுப்பினன்,
பெருமிதம் கொள்ளத் தகுதிகள் இருந்தும்,
பெருமான் முன்பு சிரம் தாழ்த்தினவன்.

புவி கொண்ட பெயருக்குப் புரியாத புதிரானவன்,
பூமியின் குடிகளுள் செல்வச் சிறப்பானவன்,
பதவி தந்த பெருமைக்குத் தலைக்கனம் இல்லாதவன்,
பணிந்து கற்கும் உள்ளத்துக்கு மாதிரிச் சின்னமானவன்.

சத்தியம் தேடும் நெஞ்சம் கொண்டவன்,
சந்தேக இருள் நீக்கும் வெளிச்சம் கொண்டவன்,
மருத்துவர் லூக்காவின் உள்ளத்தை அறிந்தவன்,
மறையின் உண்மையைக் காணக் கொடைகள் குவித்தவன்.

லூக்கா எழுதிய 'நற்செய்திக்குச்' சுவாசம் தந்தவன்,
அப்போஸ்தலர் 'நடபடிக்கு' வரலாற்றுத் தூணாய் நின்றவன்,
இரு பெரும் காவியங்கள் இவருக்காய் பிறந்தன,
இன்று கோடி ஜனங்கள் உய்யும் வழிக்குப் பாதைகள் புலர்ந்தன.

உலக பொக்கிஷத்தை உதறி எழுந்திடு,
ஜனனம் தந்த தேவனுக்குச் சாட்சியாய் வாழ்ந்திடு,
கற்றதையெல்லாம் கர்த்தருக்கே செலவிடு,
கர்த்தரின் கிருபையில் நிலைத்திருக்கக் கவனம் கொண்டிடு.

தெயோப்பிலு போலவே நாளும் வாழ்ந்திடுவோம்,
தேவனின் அன்பில் என்றும் நிலைத்திடுவோம்,
சத்தியத்தைத் தேடி நாளும் சென்றிடுவோம்,
சர்வ வல்ல தேவனுக்கு நண்பனாய் விளங்கிடுவோம்!

REV. ALBERT PRABHAKARAN



# பரிசுத்த அப்போஸ்தலன் பர்த்தலோமியு

REV. PRABAKARA SARATHY

இயேசுகிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராக விளங்கியவர் பரிசுத்த பர்த்தலோமியு. புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் அவர் 'பர்த்தலோமியு' என அழைக்கப்படுகிறார். ஆனால் யோவான் சுவிசேஷத்தில் அந்தப் பெயர் காணப்படவில்லை. அங்கு குறிப்பிடப்படும் 'நாத்தான்வேல்' என்பவரே பர்த்தலோமியு என்று வேதாகம அறிஞர்கள் கருதுகின்றனர்.

### புதிய ஏற்பாட்டில் பர்த்தலோமியுவைப் பற்றிய சில குறிப்புகள்

- அவர் கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா ஊரைச் சேர்ந்தவர் (யோவான் 1:44).
- அவர் பிலிப்புவுடன் நெருங்கிய தொடர்புடையவராக இருந்தார்.
- அவர் இயேசுவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டார் (யோவான் 1:49).
- இயேசு அவரை "உண்மையான இஸ்ரவேலன்" என்று அழைத்தார் (யோவான் 1:47).
- இயேசு அற்புதம் நடத்திய மீன்பிடித்தல் நிகழ்வில் அவர் பங்கேற்றார் (யோவான் 21:1-6).

திருச்சபை மரபுகளின்படி, பர்த்தலோமியு இந்தியாவிற்கு வந்து சுவிசேஷத்தை அறிவித்ததாகவும், மத்தேயு சுவிசேஷத்தின் ஒரு பிரதியை இந்தியாவில் விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது. பின்னர் அவர் அர்மேனியாவிற்குச் சென்று அங்கு சுவிசேஷப்பணியில் ஈடுபட்டார். அப்போஸ்தலன் யூதா, ததேயுவுடன் இணைந்து செய்த ஊழியத்தின் விளைவாக, அர்மேனியா கி.பி. 301ஆம் ஆண்டில் உலகின் முதல் கிறிஸ்தவ நாடாக மாறியது.

### பர்த்தலோமியுவின் அழைப்பு மற்றும் பதில்:

பரிசுத்த பர்த்தலோமியு கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவர். மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் அவர் "பர்த்தலோமியு" என்ற பெயரால் குறிப்பிடப்படுகிறார். "பர்த்தலோமியு" என்பது "தொல்மாயின் மகன்" என்ற பொருளுடைய குடும்பப் பெயராகும். எனவே அவரது தனிப்பட்ட பெயர் என்ன என்பது கேள்வியை எழுப்புகிறது. ஆனால் யோவான் சுவிசேஷத்தில் பன்னிரண்டாவது அப்போஸ்தலரை "பர்த்தலோமியு" என்ற பெயரில் ஒருபோதும் குறிப்பிடவில்லை. ஆனாலும் யோவான் "நாத்தான்வேல்" என்று குறிப்பிடும் சீடருடன் இதைத் தொடர்புபடுத்திக் குறிப்பிடப்படுகிறார். பிலிப்பு தன்னை அழைப்பதற்கு முன்பே, நாத்தான்வேலை அத்தி மரத்தின் கீழ் கண்டதாக இயேசு கூறினார். இதைக் கேட்டவுடன் நாத்தான்வேல் விசுவாசித்து, "ரபீ, நீர் தேவனுடைய குமாரன்; நீர் இஸ்ரவேலின் ராஜா" என்று விசுவாச அறிக்கைச் செய்தார். அவருடைய இந்த உடனடியான மற்றும் முழுமையான விசுவாசத்திற்கு பதிலாக, "இதைவிட பெரிய காரியங்களை நீ காண்பாய்" என்று இயேசு கூறினார்.

அத்தி மரத்தின் கீழ் என்ன நடந்தது? யாரும் காண முடியாத தனிமையான இடமா அது? நாத்தான்வேல் மேசியாவுக்காக ஜெபித்துக்கொண்டிருந்தாரா? இயேசு அதைக் குறிப்பிட்டவுடன் அவர் ஏன் உடனே இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொண்டார்? இவை அனைத்தும் ஒரு மர்மமாக இருந்தாலும், பர்த்தலோமியுவின் மனமாற்ற அனுபவம் எளிய விசுவாசத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. மேலும், மனிஷகுமாரனிடம் தேவதூதர்கள் இறங்கி வருவதையும், ஏறிச் செல்வதையும்



பார்ப்பாய் என்று இயேசு அவருக்கு வாக்குறுதி அளித்தார்.

### பர்த்தலோமியுவின் மரணம்:

16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கர்தினால் பரோனியஸ் (Cardinal Baronius), புனித பர்த்தலோமியு உயிரோடு தோல் உரிக்கப்பட்டு பின்னர் தலை வெட்டப்பட்டு இரத்தசாட்சியாக மரித்தார் என்று குறிப்பிட்டார்.

ஹெலெனிய (கிரேக்க) மரபின்படி, பர்த்தலோமியு Armenia நாட்டில் தூக்கிலிடப்பட்டார். அங்கு உள்ளூர் அரசரான Polymius அவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றியதற்காக அவர் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

இதன் பின்னர், அரசரும் அவரது குடும்பத்தினரும் ஞானஸ்நானம் பெற்றனர். மேலும், பர்த்தலோமியு முன்னர் புறமத வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்ட கோவிலை உண்மையான இறைவனின் ஆராதனைக்காக அர்ப்பணித்தார். அவர் நோயாளிகளை குணப்படுத்தியதாலும் மக்களிடையே பெரும் அன்பும், மதிப்பும் பெற்றார். ஆனால், பழைய மத வழிபாட்டு முறையின் ஆசாரியர்கள் அவர்மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அரசரின் சகோதரரான Astyages என்பவரிடம் புகார் செய்தனர். அதன்பின் அவர் பர்த்தலோமியுவை கைது செய்து கொடுமைப்படுத்த உத்தரவிட்டார்.

Anne Catherine Emmerich அவர்களின் கூற்றுப்படி, பர்த்தலோமியு தோல் உரிக்கப்படும் கொடூரமான துன்புறுத்தலின் போதும் தொடர்ந்து போதித்துக் கொண்டிருந்தார். அவர் இறந்த பிறகு, அவரது சீடர்கள் அவருடைய உடலை மரியாதையுடன் அடக்கம் செய்தனர். அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் ஒரு ஆலயமும் கட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. புனித பர்த்தலோமியுவின் வாழ்க்கையும், மறைசாட்சி மரணமும், கிறிஸ்துவின் மீதான அசைக்க முடியாத விசுவாசம் மற்றும் நற்செய்தி எல்லாவற்றையும் தியாகம் செய்யும் மனப்பான்மை போன்றவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

### நமக்கான அழைப்பு:

பர்த்தலோமியு இயேசுவின் அழைப்பை ஏற்று தன்னை சுவிசேஷப் பணிக்காக அர்ப்பணித்தவர். இன்று நாமும் அவரைப் போல தேவனுடைய வார்த்தையை தியானித்து, ஜெப வாழ்க்கையில் வளர்ந்து, இயேசுவுடன் நெருங்கிய உறவில் வளர அழைக்கப்படுகிறோம். நமது விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், குறிப்பாக இன்னும் நற்செய்தியைக் கேளாத மக்களிடையே சுவிசேஷத்தை எடுத்துச் செல்லவும் தேவன் நம்மை அழைக்கிறார். பர்த்தலோமியுவைப் போல ஆண்டவரின் அழைப்பை ஏற்று, பலரின் வாழ்க்கை மாற்றத்திற்கான கருவியாக மாறுவோமா? உங்கள் பதில் என்ன? இது ஒவ்வொரு விசுவாசியும் சிந்திக்க வேண்டிய முக்கியமான கேள்வியாகும்.


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தமிழ்நாடு மண்டலம்
நடத்தும்
நேரம்
காலை 9 மணி
முதல்
மாலை 4.30 மணி
வரை
ஜூன்
9
செவ்வாய்
பெரியமலை
தினம்
இடம்
யோகோவாயீரே வளாகம்,
பெரியமலை
செய்தியாளர்கள்:
அருள்திரு. பால் சாலமோன், FMPB
அருள்திரு. மெயின்ராஜ், FMPB, தூத்துக்குடி
அருள்திரு. டேனியல் அருள்மணி & குழு, FMPB, வாலிபர் பிரிவு
அருள்திரு. பால் தயாசிங், FMPB, TN Zone
மற்றும் பணித்தள ஊழியர்கள்
தரிசனமிகு பாடல்கள்
அனலூட்டும் செய்திகள்
பணித்தளப் பகிர்வுகள்
• பெரியவர்கள், வாலிபர்கள் மற்றும் சிறுவர்களுக்கான தனித்தனி கூடுகைகள் உண்டு
• காலை மற்றும் மதிய உணவு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.
கருப்பொருள்
சீர்ப்படு...
ஸ்திரப்படு...
1 பேதுரு 5:8-10.
ஆவிக்குரிய வாழ்வில் பெலப்பட
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
பங்குபெற அழைக்கிறோம்!
தொடர்புக்கு | FMPB: 93633 67535, 70921 20936,
94426 97289, 94420 74732, 7598538407


சுவிசேஷ
ஜெபக்குழு
தூத்துக்குடி வட பிராந்தியம்
ஸ்பிக் நகர் முன்னேற்றப்பணி மாவட்டம்
போ அல்லது அனுப்பு
சிறப்பு கூடுகைகள்
வாலிபர் கூடுகை
நாள் ...
13-06-2026
சனிக்கிழமை
நேரம் ...
காலை 9.30 மணிமுதல்
மாலை 4.00 மணிவரை
இடம் ...
மரியா மஹால்,
முத்தையாபுரம்.
... சிறப்பு செய்தி ...
திரு. C.ரெஜினால்ட் பிரபுதாஸ்
முன்னாள் தலைவர், FMPB, சென்னை
திரு. J. டேனியல் அருள்மணி
செயலர், வாலிபர் பிரிவு, FMPB, சென்னை
மற்றும் வாலிபர் குழுவினர்கள்
... பணித்தள பகிர்வு ...
சகோ. பர்ணபாஸ் ஜார்கன்ட்
கூடுகையின் சிறப்பு அம்சங்கள்
மன்றாட்டு ஜெபம் & துதியின் நேரங்கள்.
ரட்சிப்பின் நிச்சயம் பெற.
அபிநய பாடல்கள், குறுநாடகங்கள்.
சிந்தனையை தூண்டும் சிறப்பு செய்திகள்.
இளமையில் எழுகின்ற கேள்வி பதில்கள் (கலந்து உரையாடல்)
ஆத்தும பாரம் பெற்றிட
தேநீர் மற்றும் மதிய உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


"போ அல்லது அனுப்பு"
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
அம்பத்தூர்
வாலிபர் - இளம் வாலிபர் ஒருநாள் கூடுகை
Youth - Teen Oneday Retreat -2026
ஜூன் 14, 2026 ஞாயிறு
காலை 10.30 மணி முதல்
மாலை 4.00 மணி வரை
இடம்
FMPB தலைமை அலுவலகம்,
No. 29, உயர்நிலைப்பள்ளி சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 053.
தேவசெய்தி
Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங் (FMPB)
Rev. டேனியல் அருள்மணி (FMPB Youth wing)
பணித்தள செய்தி
Mrs. பியூலா பர்னபாஸ் (FMPB ஜார்கண்ட்)
இனிய பாடல்களுடன் துதி மற்றும்
கேள்வி - பதில், பயனுள்ள தேவசெய்தி.
வாலிப - இளம் வாலிப சகோதர, சகோதரிகள்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்
மதிய உணவு வழங்கப்படும்
தொடர்புக்கு :
9444944188, 9551105504, 9176748404, 8946012708, 9444690875


எழும்பிப் பிரகாசி / ARISE & SHINE (ஏசாயா 60:1)
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
கருங்கல் பணி மாவட்டம் நடத்தும்
வாலிபர்
கூடுகை
ALERT | ACTION | ACTIVITY
2026
ஜூன்
27
(சனிக்கிழமை)
காலை
9.30 மணி
முதல்
மாலை
4.00 மணி
வரை
இடம்: C.S.I. கஸ்பா சபை,
கருங்கல்
தலைமை
Rev. P. ஜெயசெல்வன், M.A., B.D., M.Th.
(தலைமை ஆயர்)
Rev. E. ஐசக்பால், M.A., B.D., M.Th.
(உதவி ஆயர்)
Rev. S. ஆஸ்ட்ரின் சுந்தர், M.A., B.D.,
(உதவி ஆயர்)
செய்தியாளர்கள்:
Rev. G. கிங்ஸ்லி,
பயிற்சி பிரிவு, FMPB
J. டேனியல் அருள்மணி,
வாலிபர் பிரிவு, FMPB
Bro. ஆக்னல்,
JOY Awareness Ministries,
பட்டுக்கோட்டை
மற்றும் மிஷனெரிகள்
LIVELY SONGS
ENGAGING SESSIONS
INSPIRING MESSAGES
அன்புடன் அழைக்கிறோம்
கருப்பொருள்:
எழும்பி பிரகாசி
ஏசாயா 60:1
தொடர்புக்கு
FMPB, Ph: 96597 32373, 94423 67135,
89037 05343, 75400 18471